Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION | MONEY TRANSFER | SM | வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்
மூலம் 20 நிமிட நேரத்தில் உங்கள்
கைகளில் பணம்கிடைக்க எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P: 021 222 5392
Fax: 2223214
E-Mail: smskr@eureka.lk
சிவன்கோவில் வீதி,
காரைநகர்.
T.P: 060 2212472
(சி-2015)

19 MAR 2004

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 பங்குனி 06 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 முஹறம் 27 (19.03.2004) வெள்ளிக்கிழமை இதழ் :171

# புதிதாக அமையவுள்ள அரசாங்கம் பிரபாவை அணுகியே ஆகவேண்டும்



## பி.பி.சி பேட்டியில் ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

**எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் இலங்கையில் அமையவிருக்கும் புதிய அரசாங்கம் விடுதலைப் புலிகளின் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரனை எப்படியும் அணுகியே ஆகவேண்டும்.**

**என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பி.பி.சிக்கு நேற்று வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.**

**இந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது,**

கருணாவின் முடிவால் விடுதலைப் புலிகள் அமைப்புக்குள் ஏற்பட்டுள்ள பிரிவு, அந்த அமைப்புக்கிடையே யுத்தத்தில் போய் முடியக் கூடும்.

நீண்டகால நோக்கில் பார்த்தால் விடுதலைப் புலிகள் அமைப்பின் பலம் வாய்ந்த ஒரு தளபதியான கருணா அந்த அமைப்பில் இருந்து விலகி இருப்பது விடுதலைப் புலிகள் அமைப்பை பலவீனப்படுத்தி விடும்.

எதிர்வரும் தேர்தல் மூலம் ஆட்சி அமைக்கும் அரசு விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து' விலகிச் சென்றிருக்கும் கருணாவை, எப்படி அணுகலாம் என்ற வழி முறைகளை கண்டறிந்தாக வேண்டும்.

கருணா என்னுடன் தொடர்பை ஏற்படுத்த பல முறை முயன்றார். ஆனால், திரைமறைவில் பேதங்கள் எவற்றையும் வைத்திருக்கும் வழக்கம் எனக்கில்லை.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், விடு (12 ஆம் பக்கம் பார்க்க)

## அன்னை பூபதி நினைவு இன்று முதல் ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதியின் 16 ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வும் நாட்டுப்பற்றாளர் நினைவு தினமும் இன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட அரசியல் துறையினர் அறிவித்தனர்.

இந்த நாள் அன்னை பூபதியினதும், நாட்டுப் பற்றாளர்களினதும் தியாகங்களை நினைவுகூரும் நாளாக அமைகின்றது. இந்தியப் படையினர் தமிழ் மண்ணை ஆக்கிரமித்து நின்றபோது அமைதியைப்பேண தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டும் எனக் கோரி எந்த அழுத்தத்திற்கும் இடம்கொடாது தனது இலட்சிய வெறியுடன் அமைதியாக பூபதி சாவடைந்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 13 அமைச்சுக்களை ஜனாதிபதி ரத்துச் செய்ததாக அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவினால் ஏற்கனவே பொறுப்பேற்கப்பட்ட 13 அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்கள் நேற்று ரத்துச்செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

காபந்து அரசாங்கத்தில் அதிக எண்ணிக்கையான அமைச்சர்கள் இருக்கத்தேவையில்லை என்ற காரணத்தினாலேயே ஜனாதிபதி இந்த நடவடிக்கையை எடுத்தார் என தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அமைச்சுக்களைக் குறைக்கும் ஜனாதிபதியின் திட்டத்தின் கீழேயே இந்த அமைச்சுக்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இந்த வகையில் நீர் முகாமைத்துவம், வீடமைப்பு, வெளிநாட்டலுவல்களுக்கு உதவி புரியும் அமைச்சு, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, உல்லாசப் பயணத்துறை அமைச்சு, சமுர்த்தி அமைச்சு, நீர்ப்பாசனத்துறை அபிவிருத்தி அமைச்சு, விவசாயத்துறை அமைச்சு, தொழில்நுட்ப அமைச்சு, நெற்பயிர்ச் செய்கைகள் மேம்படுத்தல் அமைச்சு காணிக்கான பதிவுகள் அமைச்சு, விஞ்ஞானத் தொழில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.மு. சார்பில் போட்டியிட்ட திருமலை வேட்பாளர் விலகினார்

(திருகோணமலை)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் போட்டியிட வேட்புமனுத் தாக்கல் செய்த வேட்பாளர் ஒருவர் தான் போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது-

ஐக்கிய தேசிய முன்னணயின் ஏழு வேட்பாளர்களில் ஒருவரான நாகராஜா சாம்பசிவமூர்த்தி என்பவரே போட்டியிலிருந்து விலகுவதாக நேற்று அறிவித்தார்.

சுகவீனம் காரணமாகத் தான் போட்டியிலிருந்து விலகிக் கொள்வதாக ஊடகங்களுக்கு அவர் அனுப்பிவைத்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் ஐக்கிய தேசிய முன்னணி நிறுத்தியிருக்கும் ஏழு வேட்பாளர்களில் ஆறுபேர் சிங்களவர்களாவர்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் ஐ.தே.க இந்த மாவட்டத்தில் முஸ்லிம் வேட்பாளர்கள் எவரையும் நிறுத்தவில்லை.

தமிழர் ஒருவரை மட்டுமே இந்தக் கட்சி தேர்தலில் நிறுத்தியிருந்தது. அவரும் தேர்தலில் இருந்து விலகுவதாக அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஒட்டமாவடி சம்பவம்; கண்டித்து ஹர்த்தால்

## லண்டனில் பாலசிங்கத்துடன்

## ஓட்டமாவடி சம்பவம்; கண்டித்து ஹர்த்தால்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - ஓட்டமாவடி காவத்தை முனைப்பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல் வன்முறைச் சம்பவங்களைக் கண்டித்து, இந்தப் பிரதேசத்தில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

ஓட்டமாவடி, மீராவோடை, வாழைச்சேனை, காவத்தை ஆகிய பிரதேசங்களில் நேற்று வழமைநிலை முற்றாகப் பாதிக்கப்பட்டது.

பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள், அலுவலகங்கள் அனைத்தும் முற்றாக மூடப்பட்டிருந்ததுடன் தூரஇடங்களுக்கான போக்குவரத்துச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# லண்டனில் பாலசிங்கத்துடன் சொல்ஹெய்ம் சந்தித்து பேச்சு!

(லண்டன்)

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

கொழும்பிலிருந்து நேற்றுமுன்தினம் காலை இலண்டனை சென்றடைந்த எரிக் சொல்ஹெய்ம், அன்ரன் பாலசிங்கத்துடன் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளை நடத்தியதாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச்சந்திப்பில் கருணா விவகாரம், இலங்கையின் தேர்தல், போர்நிறுத்த நடைமுறைகள் மற்றும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பித்தல் போன்ற விடயங்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி

# வாக்காளர்களுக்காக வன்னியில் கொத்தணி வாக்களிப்பு நிலையம்!

### தெரிவத்தாட்சி அலுவலர் அறிவிப்பு

எதிர்வரும் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் வவுனியா இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் உள்ள மக்கள் வாக்களிப்பதற்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக வவுனியா தெரிவத்தாட்சி அலுவலர் கே.கணேஸ் தெரிவித்தார்.

நேற்று தேர்தல் ஆணையாளரைச் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னரே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது,

வன்னி தேர்தல் மாவட்டத்திலே 79 ஆயிரம் வாக்காளர்கள் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் வாழ்கிறார்கள். இந்த வாக்காளர்களுக்கு ஓமந்தை வீதியூடாகவும், மடு வீதியூடாகவும் வாக்களிக்கச் செல்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். உயிலங்குளத்திலே

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சாதாரணதரப் பரீட்சை முடிவு வியாழனன்று வெளிவரும்!

(கொழும்பு)

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரணப் பரீட்சை முடிவுகள் அடுத்த வாரம் வெளியாகும் என பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

அடுத்தவார இறுதிக்கு முன்னர் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டு விடும் என்று தெரிவித்த பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவர் பெரும்பாலும் வியாழக்கிழமை இந்த முடிவுகள் வெளியாகும் எனத் தெரிவித்தார்.

கடந்த டிசம்பர் 1 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதிவரை நடைபெற்ற இந்தப் பரீட்சைக்கு தனிப்பட்ட பரீட்சார்த்திகள் 1 லட்சத்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# இலங்கையில் பௌத்த ராஜ்யம் அமைக்கவே பிக்குகளை நாடாளுமன்றம் அனுப்புகிறோம்!

## ஜாதிக ஹெல உறுமய கூறுகின்றது



(கொழும்பு)

பௌத்தர்களின் உரிமைகள் மற்றும் அவர்களது பஞ்ச சீல கொள்கைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு, பௌதத பிக்குகள் கண்டிப்பாக நாடாளுமன்றில் இருக்கவேண்டுமென ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் வண. கொலன்னாவ சிறி சுமங்கள தேரர் தெரிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமயவில் உள்ள பௌத்தபிக்குகளின் கூட்டம் குருநாகலில் நடந்தபோதே, கொலன்னாவ சிறி சுமங்கள தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

இலங்கையில் பௌத்த ராஜ்யம் ஒன்றை அமைக்கும் நோக்கிலேயே பிக்குகள் நாடாளுமன்றம் செல்வதற்குத் தீர்மானித்துள்ளனர்.

அத்துடன், எமது ராஜ்யத்தில் முன்னைய அரசர்களால் சுமார் 34,000 குளங்கள் கட்டப்பட்டிருந்தன. ஆனால், அவையெல்லாம் தற்போது சீரழிக்கப்பட்டுவிட்டன. இந்த நாட்டில் இளைஞர்கள் வேலைவாய்ப்பில்லாமல் உள்ளனர்.

ஆட்சியாளர்கள் வழங்கிய உறுதிமொழிகள் எல்லாம் அவர்களாலேயே முறியடிக்கப்பட்டன.

அதேவேளை, இந்த நாடு இரண்டாகப் பிளவுபடுவதையும் அனுமதிக்க முடியாது என அவர் தெரிவித்தார்.

# தேர்தல் பிரசார நடவடிக்கையை பொலிஸ் அதிகாரி குழப்புகிறார்!

## அமைச்சர் ரவி கருணாநாயக்க குற்றச்சாட்டு



தனது தேர்தல் பிரசார நடவடிக்கைகளை பிரதி பொலிஸ் மா அதிபர் ஜயந்த விக்கிரமரட்ண திட்டமிட்டரீதியில் குழப்பும் முயற்சியில் ஈடுபடுவதாக வர்த்தக, நுகர்வோர்துறை அமைச்சர் ரவி கருணாநாயக்க சுதந்திர பொலிஸ் ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இவரது இந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச வெலிக்கடை பொலிஸாருக்கு கொடுத்த தவறான தகவலின் அடிப்படையில், கோட்டையிலுள்ள எனது அலுவலகத்திற்குள் அவர்கள் புகுந்து தேடுதல் நடத்தியுள்ளனர்.

அத்துடன் விஜித ஹேரத் என்பவரும் எனது அலுவலகத்திற்குள் புகுந்து தேர்தல் தொடர்பான எனது கட்சி விளம்பரங்களைத் தேடியுள்ளார். ஜயந்த விக்கிரமரட்ண தேர்தலுக்கான பிரதி பொலிஸ் மா அதிபராகச் செயற்படுகின்றார்.

எனவே, அந்தப் பதவியிலிருந்து நீக்கி அவருக்கெதிராக தேவையான நடவடிக்கையை சுதந்திர பொலிஸ் ஆணைக்குழு எடுக்கவேண்டுமெனவும் ரவி கருணாநாயக்க தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் கண்காணிப்புக்கு அமெரிக்காவும் நிதியுதவி!

(கொழும்பு)

ஏப்ரல் 2 ஆம் திகதி இலங்கையில் நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலைக் கண்காணிப்பதற்காக அமெரிக்கா ஆறு லட்சம் அமெரிக்க டொலர்களை நன்கொடையாக வழங்கவுள்ளது.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் மற்றும் 'பவ்ரல்' அமைப்புக்களுக்கு நான்கு லட்சம் அமெரிக்க டொலர்கள் வழங்கப்படவுள்ளன. மிகுதிப் பணம் இலங்கைத் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ள உள்ளூர் அமைப்புக்களுக்கு வழங்கப்படவுள்ளது.

ஒரு நாட்டின் ஜனநாயகத்துக்கு அந்த நாடடின் தேர்தல் ஒழுங்காக இடம்பெறுதல் அவசியம். அதனடிப்பையிலேயே அமெரிக்கா இந் நிதியுதவியை வழங்குவதாக, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜவ்ரி லன்ஸ்ரிட் தெரிவித்தார்.

(01)

# தேசியத் தலைவர் நியமித்த போராளிகள் மட்டக்களப்புக்கு சென்று பொறுப்பேற்பர்!

## அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு



தமிழீழத் தேசியத் தலைவரால் நியமிக்கப்பட்ட போராளிகள் - விரைவில் மட்டக்களப்புக்குச் சென்று, தமது பொறுப்புக்களை ஏற்றுச் செயற்படுவர் எனத் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

இலங்கையில் அரச ஊடகமொன்றிற்கு அவர் நேற்றுமுன்தினம் வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது - தமிழீழத் தேசியத் தலைவரால் நியமிக்கப்பட்ட சிறப்புத் தளபதி மற்றும் பொறுப்பாளர்கள், போராளிகள் விரைவில் மட்டக்களப்பிற்குச் சென்று தமது பொறுப்புக்களைக் கையேற்று செயற்படவுள்ளார்கள்.

தமிழத்தேசிய ஒருமைப்பாட்டை, தமிழர்களின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்து விசுவாசிக்கின்ற அனைத்து மக்களுக்கும், கருணா எனகின்ற தனிமனிதன் புதியதொரு துரோகச் செயலில் ஈடுபட்டாலும், நாம் அதனை மிகவிரைவில் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து நிலைமைகளைச் சீராக்குவோம். குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மக்கள் - கருணாவின் மோசடிகள் மற்றும் குற்றச்செயல்கள் தொடர்பாகவும் மிகவும் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளாா கள்.

மட்டக்களப்பில் சமாதானச் சூழலை சீர்குலைக்காது அதனை முன்னெடுத்துச் செல்லவேண்டிய பாரிய பொறுப்பு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இருக்கின்றது.

தற்போது அங்கிருக்கும் ஆயிரக் கணக்கான போராளிகளின் உயிர்களுக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படாமல் அவர்களை மீட்டெடுப்பதே தமிழீழத் தேசியத் தலைவரின் நோக்கமாகும்.

அதற்கு ஏற்ப சிறப்பான தந்திரோபாயங்களில் ஈடுபட்டு, நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

### கம்பன் விழா

கொழும்பு கம்பன் கழகத்தினரால் வருடாந்தம் நடாத்தப்படும் கம்பன் விழா - இந்த ஆண்டும் சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மே மாதம் 20 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதிவரை தொடர்ந்து இந்த விழா நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு கம்பன் விழாவில் பேச்சு, கவிதைப் போட்டிகளை நடத்துவதற்குரிய ஏற்பாடுகளை கொழும்பு கம்பன் கழகம் மேற்கொண்டுள்ளது.

# அரச சொத்து துஷ்பிரயோகம் தொடர்பாக 48 மணித்தியாலத்திற்குள் அறிக்கை தருக!

## பொலிஸ் மா அதிபருக்கு சந்திரிகா உத்தரவு

(கொழும்பு)

அரச சொத்துக்களைத் துஷ்பிரயோகம் செய்வோர் தொடர்பான விவரங்களை 48 மணித்தியாலங்களுன் தம்மிடம் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொலிஸ் மா அதிபரைப் பணித்துள்ளார். தேர்தல் பிரசாரத்திற்காக அரச வாகனங்களைப் பயன்படுத்துவதுடன் அரச சொத்துக்கள் பலவற்றையும் சிலர் பயன்படுத்தி வருகின்றனர்.

இது தொடர்பாக பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. ஏற்கனவே பொலிஸ் மா அதிபருக்கு இதுபற்றி அறிவிக்கப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எவராலும் எடுக்கப்படாத நிலையிலேயே ஜனாதிபதி சந்திரிகா இந்த உத்தரவைப் பிறப்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரச வாகனங்கள் மற்றும் சொத்துக்களை ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்களும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுமே அதிகளவில் பயன்படுத்தி வருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

# எந்தக்கட்சி ஆட்சி அமைத்தாலும் புலிகளுடன் புதிய உடன்படிக்கை!

## முன்னாள் பிரதி அமைச்சர் அதாவுல்லா கூறுகிறார்

(கொழும்பு)

தேர்தல் முடிவடைந்தபின் ஆட்சி அமைக்கும் எந்தக் கட்சியும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் புதிய புரிந்துணர்வு உடன்படிக்கையை ஏற்படுத்த வேண்டும் என முன்னாள் பிரதி அமைச்சரான அதாவுல்லா தெரிவித்தார்.

ஏறாவூர் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்-

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்திற்குமிடையே செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையால் முஸ்லிம் மக்களுக்கு எதுவித நன்மையும் ஏற்படவில்லை.

முஸ்லிம் மக்களுக்கான எந்த உரிமையும் அதில் வழங்குவதாகத் தெரிவிக்கப்படவில்லை.

எனவே, மீணடும் இந்தத் தேர்தலில் வெற்றிபெற்று ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சி அமைத்தாலோ அல்லது ஐக்கிய மககள் சுதந்திர முன்னணி ஆட்சியமைகக நேர்ந்தாலோ தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சை ஆரம்பிக்கும்போது, புதிய புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

அதில் முஸ்லிம் மக்களின் சகல பிரச்சினைகளும் தீர்க்கப்படக்கூடிய வகையில் தீர்வு யோசனை உள்ளடககப்பட்டிருக்க வேண்டும் மற்றும் கிழக்குப் பிரதேசம் முஸ்லிம் மக்களுக்குரியது என வலியுறுத்தப் படுதல்வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ப)

# ஓமந்தையிலுள்ள கிணற்றில் வெடிபொருட்கள் மீட்கப்பட்டது

வவுனியா ஓமந்தைப் பகுதியிலுள்ள ஒரு கிணற்றிலிருந்து நேற்று முன்தினம் ஒரு தொகுதி வெடிபொருட்கள் எவ்.எஸ்.டி அமைப்பினரால் மீட்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

கடந்த செவ்வாய்க்கிழமை ஓமந்தைப் பகுதியிலுள்ள ஒரு கிணற்றில் வெடி பொருட்கள் இருப்பதனைக் கண்ட பொது மக்கள், இதனை வவுனியாவில் கண்ணிவெடி அகற்றும் எவ்.எஸ்.டி அமைப்பிற்கு தெரிவித்தனர். இதனையடுத்து நேற்றுமுன்தினம் பிற்பகல 2.30 மணியளவில் வந்த அந்த அமைப்பினர் - மூன்று நீரிறைக்கும் இயந்திரங்கள் மூலம் கிணற்றிலிருந்த நீரை அகற்றிய பின் அதற்குள்ளிருந்த வெடிபொருட்களை மீட்டனர்.

கிணற்றிலிருந்து - 120 மி.மீ மோட்டார் ஷெல்கள் 18, 60 மி.மீ மோட்டார் ஷெல்கள் 07, கிரனைட் 01, மோட்டார் புறப்பிளர் 28, ஆட்லறி பியூஸ் 07, பியூஸ் 26 என்பன மீட்கப்பட்டுள்ளன.

இதனைவிட, மேலும் பல வெடி பொருட்கள் இந்தக் கிணற்றில் இருக்கலாம் என நம்பப்படுகின்றது. அத்துடன், இந்தப் பிரதேசம் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் வெடிபொருட்கள் அற்ற பிரதேசம் என முன்னர் உறுதிப்படுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

(03)

# தஞ்சமடைந்த இரண்டு சிறுமிகள் உறவினரிடம் ஒப்படைப்பு

(வவுனியா)

வவுனியாவிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியற்துறையினரிடம் கொழும்பிலிருந்து தப்பி வந்து தஞ்சமடைந்திருந்த பெண்களில் இரண்டு சிறுமிகள் நேற்றுமுன்தினம் அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

ரவீந்திரன் சுதா (வயது 15), பிலிப் சீதா (வயது 16) ஆகிய இரண்டு சிறுமிகளுமே வவுனியா - தரணிக்குளத்தைச் சேர்ந்த குணசேகரம் ராஜேஸ்வரி என்ற உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதேவேளை, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பராமரிப்பில் இருந்த ஒரு பெண்கள் நேற்றுமுன்தினம் யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்தப் பெண்கள் எங்கு செல்லவேண்டும் என்பதனை அவர்களே தீர்மானிப்பார்கள் எனவும தெரிவிக்கப்படுகிறது.

(03)



ஓமந்தையிலிருந்து வெடிபொருட்கள் மீட்கப்பட்ட கிணற்றையும் - மீட்கப்பட்ட வெடிபொருட்களையும் படத்தில் காணலாம்

(03)

### வடக்கின் பெரும் போர்

# யாழ்.மத்திய கல்லூரி அணி 101 ஓட்டங்களில் சுருண்டது

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற யாழ். மத்திய கல்லூரி அணிக்கும், யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடையிலான வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படும் கிரிக்கெட் போட்டியின் முதலாம் நாள் ஆட்டமுடிவின்போது யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி அணி நான்கு விக்கெட் இழப்புக்கு 88 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். மத்திய கல்லூரி அணித் தலைவர் ஆர்.மதூசன் தன்னுடைய அணியினை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, துடுப்பாட்டத்தை ஆரம்பித்தபோது 41 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 101 ஓட்டங்களினை யாழ். மத்திய கல்லூரி அணி பெற்றுக்கொண்டது.

இந்த அணியின் சார்பில் ஏ.யசிந்தன் 37 ஓட்டங்களினையும், ஆர். மதூசன் 13 ஓட்டங்களினையும் பெற்றுக்கொடுத்தனர். சென். ஜோன்ஸ் அணியின் சார்பில் மயூரதன் 15 ஓவர்கள் பந்துவீசி 27 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், மதனராஜ் 9 ஓவர்கள் பந்துவீசி 22 ஓட்டங்களைக் கொடுத்து 1 விக்கெட்டையும், அன்ரூ 6 ஓவர்கள் பந்துவீசி 20 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 1 விக்கெட்டினையும், நவகீதன் 6 ஓவர்கள் பந்துவீசி 20 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டையும், கிருஷ்ணகுமார் 2 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 49 ஓவர்களினைச் சந்தித்து 4 விக்கெட் இழப்பிற்கு 88 ஓட்டங்களினைப் பெற்றுள்ளது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பில் அன்புஜன் 27 ஓட்டங்களையும், சசிந்தன் 16 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். கிருஷ்ண குமார் ஆட்டமிழக்காது 23 ஓட்டங்களையும், டினோஷ் ஆட்டமிழக்காமல் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

யாழ். மத்திய கல்லூரி அணியின் சார்பில் பந்துவீசிய நவஜீவ் குமார் 19 ஓவர்கள் பந்துவீசி 43 ஓட்டங்களினை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் மதூசன் 17 ஓவர்கள் பந்துவீசி 18 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 1 விக்கெட்டினையும், ஷியாம்ராஜ் 7 ஓவர்கள் பந்து வீசி 12 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 1 விக்கெட்டினையும் கைப்பற்றியுள்ளனர்.

100 ஆவது வருடப் போட்டியாக அமைந்த இந்தப் போட்டியின் ஆரம்பத்தின்போது இரு அணிகளினதும் முன்னாள் அணித் தலைவர்களும் பயிற்றுநர்களும், பொறுப்பாசிரியர்களும் மைதானத்தில் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த வடக்கின் பெரும் சமர் போட்டி தொடர்ந்தும் இன்றும் நாளையும் காலை 10.30 மணிமுதல் நடைபெறவுள்ளது. (58)

## நியூசிலாந்துடனான இரண்டாவது டெஸ்ட் தென்னாபிரிக்க அணி வலுவான நிலையில்

நியூசிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் ஒக்லண்டில் நேற்று ஆரம்பமான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 231 ஓட்டங்களைப் பெற்று மிகவும் வலுவான நிலையில் உள்ளது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. எனவே, தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தொடங்கியது.




இதன்படி நேற்றைய ஆட்டத்தைத் தொடங்கிய தென்னாபிரிக்க அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான அணித்தலைவர் ஸ்மித் மற்றும் கிப்ஸ் இருவரும் மிகச் சிறப்பாக விளையாடி நல்லதொரு அடித்தளத்தையிட்டனர். ஸ்மித் 88 ஓட்டங்கள் எடுத்த நிலையிலும், கிப்ஸ் 80 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். இவர்கள் இருவரும் ஆரம்ப இணைப்பாட்டமாக 177 ஓட்டங்களைப் பெற்றனர்.

தற்போது இந்த அணி சார்பாக றுடோல்ப் 14 ஓட்டங்களுடனும், கலிஸ் 39 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர். பந்து வீச்சில் மார்ட்டின், கெயின்ஸ் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றியுள்ளனர்.

முன்னதாக ஹமில்ரனில் நடந்த முதலாவது டெஸ்ட் சமநிலையில் முடிவடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் அணியில் தபீக் உமர் இணைப்பு

(இஸ்லாமபாத்)

இந்திய - பாகிஸ்தான் அணிகள் மோதும் 3 ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி பெஷவாரில் இன்று நடக்கிறது. இந்தப் போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் தபீக் உமர் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளார். 17 ஒரு நாள் போட்டியில் விளையாடியுள்ள உமர் இந்திய அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் 104 ஓட்டங்கள் குவித்து பாகிஸ்தான் 'ஏ' அணியின் வெற்றிக்கு காரணமாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அணியில் இருந்து ராவ் குப்திகார், மிஸ்பக் உல்ஹக் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவுக்கு எதிரான 3 ஆவது போட்டிக்கான பாகிஸ்தான் அணி வருமாறு:-

இன்ஸமாம் (கப்டன்), யூசுப் யுகானா, சயிட் அப்ரிடி, யாசிர் ஹமீது, யூனுஸ்கான், அப்துல் ரசாக், சோயிப் மாலிக், மொயின்கான், சோயிப் அக்தர், முகமது சமி, சபீர் அகமது, சக்லைன் முஸ்தாக், ராணா நவீத், தபீக் உமர், இம்ரான் பர்கத்.

# மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவின்போது அவுஸ்ரேலியா 5 விக்கெட்டுக்களுக்கு 320




இலங்கை - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் கண்டி அஸ்கிரிய மைதானத்தில் நடைபெற்றுவரும் 2 ஆவது டெஸ்ட் போட்டியின் 3 ஆம் நாளான நேற்று அவுஸ்ரேலிய அணி கில்கிறிஸ்ட் மற்றும் மாட்டின் இருவரதும் சதத்தால் 5 விக்கெட்டுக்களை இழந்து 320 ஓட்டங்களைப் பெற்று, மிகவும் வலுவான நிலையிலுள்ளது.

முன்னதாக இரண்டாம் நாள் ஆட்ட முடிவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 221 ஓட்டங்களைப் பெற்றிருந்த அவுஸ்ரேலியா நேற்று தனது ஆட்டத்தை ஆரம்பித்த 3 ஆவது ஓவரிலேயே, கில்கிறிஸ்டின் விக்கெட்டை இழந்தது.

அதன் பின்னர் லீமன், அணித் தலைவர் பொண்டிங் இருவரும் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

அவுஸ்ரேலிய அணி சார்பில் கில்கிறிஸ்ட் 144, லீமன் 21, பொண்டிங் 27, மார்டின் ஆட்டமிழக்காமல் 104 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சமிந்தவாஸ் 3 விக்கெட்டுக்களையும், முரளிதரன், சொய்சா இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றியுள்ளனர். இதன் மூலம் அவுஸ்ரேலிய அணி 229 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கின்றது.



முதலாவது இனிங்சில் அவுஸ்ரேலியா 120 ஓட்டங்களையும், இலங்கை 211 ஓட்டங்களையும் பெற்றிருந்தன.

87 ஓவர்கள் வீசிமுடிக்கப்பட்ட நிலையில் காலநிலை சீரின்மை காரணமாக நேற்றைய ஆட்டம் குறித்த நேரத்திற்கு முதலேயே நிறுத்தப்பட்டது.

## பாகிஸ்தான் அணியின் தலைவர் இன்ஸமாமுக்கு அபராதம் விதிப்பு!

ராவல்பிண்டியில் நடந்த இரண்டாவது போட்டியில் பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சு மெதுவாக இருந்தது. இதனைத் தொடர்ந்து அந்த அணி கப்டன் இன்ஸமாமுக்கு போட்டியின் கட்டணத்தில் 80 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

அணியின் மற்ற வீரர்களுக்கு 15 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. இதனை ஐ.சி.சி. போட்டியின் நடுவர் ரஞ்சன் மடுகல்லே அறிவித்துள்ளார்.

அடுத்த 12 மாதத்தில் இதே போன்று மெதுவாக பாகிஸ்தான் அணி பந்து வீசினால் கப்டன் இன்ஸமாமுக்கு 2 முதல் 4 டெஸ்ட் அல்லது 4 முதல் 8 ஒரு நாள் போட்டிகளில் ஆடத் தடை விதிக்கப்படும் என்றும் போட்டி நடுவர் தெரிவித்தார்.

## விளையாட்டு

### இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ்.சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலையின் இந்த வருடத்துக்கான இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் ப.இரத்தினசபாபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் உடுவில் உதவிப் பிரதேச செயலர், எஸ்.ஆர். ஜெயப் பிரகாசம் பிரதம விருந்தினராகவும், உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (69)

### உடற்கல்விப் போட்டிகள்

வடமராட்சி வலய பாடசாலைகளுக்கிடையேயான உடற்கல்விப் போட்டிகள் இன்று 8.30 மணிக்கு யாழ்.நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளதாகவும், போட்டிகளில் பங்குபற்றும் பாடசாலைகளை உரிய நேரத்திற்கு சமுகம் தருமாறும் வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வே.வல்லிபுரம் தெரிவித்தார். (12)

# சோனியா காந்தி பிரதமரானால் நாடாளுமன்றம் செல்லமாட்டேன்

### பி.ஏ.சங்மா சபதம்

சோனியா காந்தி பிரதமரானால் நான் நாடாளுமன்றத்துக்குச் செல்லமாட்டேன் என்று பி.ஏ.சங்மா சபதம் செய்துள்ளார்.

சோனியா காந்தியின் தலைமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, சரத் பவாருடன் காங்கிரஸைவிட்டு விலகியவர் நாடாளுமன்ற முன்னாள் சபாநாயகர் பி.ஏ.சங்மா.

சரத்பவார் காங்கிரஸ் கட்சியுடன் தேர்தல் கூட்டணி அமைத்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து அவரது தேசியவாத காங்கிரஸிலிருந்து விலகிய பி.ஏ.சங்மா சமீபத்தில் மம்தா பானர்ஜியின் திரிணாமுல் காங்கிரஸில் சேர்ந்தார்.

தற்போது தேசியவாத திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்து வருகிறார்.

அசாம் மாநிலம் கவுகாத்தியில் சங்மா நிருபர்களுக்கு அளித்தபேட்டியில் கூறியதாவது:-

வெளிநாட்டைச்சேர்ந்தவர் இந்தியப் பிரதமர் ஆகக்கூடாது என்ற கருத்தில் நான் தொடாந்தும் உறுதியாக இருக்கின்றேன். மற்றபடி சோனியாவுக்கும், எனக்கும் தனிப்பட்ட முறையில் எந்த விரோதமும் கிடையாது.

ஒருவேளை சோனியா பிரதமரானால் நான் நாடாளுமன்றத்துக்கு போகமாட்டேன். "எம்.பி" பதவியை ராஜினாமா செய்துவிடுவேன்.

ராகுல்காந்தி, பிரியங்கா ஆகியோர் பிரதமராக வருவதில் எந்த ஆட்சேபனையும் இல்லை என்றார்.

# அசிஷ் நெஹ்ராவிற்கு பதிலாக அமீத் பண்டாரி இணைப்பு

இந்திய அணியில் காயம் அடைந்த அசிஷ் நெஹ்ராவுக்கு பதிலாக அமீத் பண்டாரி சேர்க்கப்பட்டுள்ளார். அவர் பாகிஸ்தான் சென்றுள்ளார்.

நெஹ்ராவுக்கு பதிலாக மாற்று வீரரை அனுப்பிவைக்குமாறு இந்திய அணி நிர்வாகம் கிரிக்கெட் சபையைக் கேட்டுக்கொண்டது. அணி நிர்வாகம் கேட்டுக்கொண்டதன் பேரில் நெஹ்ராவுக்கு பதிலாக வேகப்பந்து வீச்சாளர் அமீத்பண்டாரி அணியில் சேர்க்கப்பட்டுள்ளதாக இந்திய கிரிக்கெட் சபையின் செயலாளர் எஸ்.கே.நாயர் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், ஏற்கனவே "நெஹ்ரா உடல் தகுதி பெறாத பட்சத்தில் அவருக்கு பதிலாக அமீத் பண்டாரியை இறக்க, அணியினருடன் அவர் செல்லத் தேர்வுக்குழு முடிவுசெய்து இருந்தது. அதன்படி பண்டாரி சேர்க்கப்பட்டுள்ளார். 3 ஆவது ஒருநாள் போட்டியில் பண்டாரி விளையாடுவார் என அவர் தெரிவித்தார்.

# பாரதீய ஜனதா - தெலுங்குதேசம் தொகுதிப் பங்கீட்டில் உடன்பாடு

(ஹைதரபாத்)

ஆந்திர மாநிலத்தில் பாரதீய ஜனதா - தெலுங்குதேசம் கட்சிகளுக்கு இடையே தொகுதிப் பங்கீட்டில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

மொத்தம் உள்ள 42 நாடாளுமன்ற தொகுதியில் 9 தொகுதிகளும், 294 சட்டமன்றத் தொகுதிகளில் 27 தொகுதிகளும் பாரதீய ஜனதாவுக்கு ஒதுக்கப்பட்டு இருக்கிறது.

ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடுவும் பாரதீய ஜனதா பொதுச்செயலாளர் பிரமோத் மகாஜனும் நேற்றுமுன்தினம் ஹைதராபாத்தில் கூட்டாக இந்த தகவலை நிருபர்களிடம் வெளியிட்டனர்.

இருவரும் சந்திரபாபு நாயுடு வீட்டில் நடத்திய 5 மணி நேர பேச்சுவார்த்தைக்குப் பிறகு தொகுதிப் பங்கீட்டில் இறுதி முடிவு எடுக்கப்பட்டது. கடந்த தேர்தலில் பாரதீய ஜனதாவுக்கு 8 நாடாளுமன்ற தொகுதிகளும், 24 சட்டசபை தொகுதிகளும் ஒதுக்கப்பட்டு இருந்தது.

# தமிழக தேர்தல் மன்னன் வாஜ்பாயை எதிர்த்து போட்டி

ஒரு தேர்தலும விடாமல் தொடர்ந்து போட்டியிட்டு சாதனை படைத்து வரும் தேர்தல் மன்னன் பத்மராஜன் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் வாஜ்பாயை எதிர்த்து லக்னோ தொகுதியில் போட்டியிடவுள்ளார்.

சேலத்தைச் சேர்ந்தவர் பத்மராஜன், தேர்தல்களில் போட்டியிடுவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளார். இதுவரை மொத்தம் 62 முறை தேர்தலில் போட்டியிட்டு சாதனை படைத்துள்ளார். ஒருமுறைகூட கட்டுப்பணத்தைப் பெறவில்லை என்பது வேறு விடயம்.

குடியரசுத் தலைவர் பதவிக்கு கே.ஆர்.நாராயணன் போட்டியிட்ட போதும், பின்னர் அப்துல் கலாம் போட்டியிட்டபோதும் அவர்களை எதிர்த்துப் போட்டியிட மனுசெய்தார்.

ஆனால், அவரது மனு நிராகரிக்கப்பட்டுவிட்டது. இதனால் இந்த இரண்டு தேர்தல்களில் மட்டுமே அவரால் போட்டியிட இயலாமல் போனது.

இந்த முறை நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் வாஜ்பாயை எதிர்த்து அவரது லக்னோ தொகுதியில் வேட்பு மனுத் தாக்கல் செய்ய பத்மராஜன் முடிவுசெய்துள்ளார். கின்னஸ் சாதனை படைப்பதுதான் தனது நோக்கம் என்றும் அவர் கூறுகிறார்.

# எமது ஒன்றுபட்ட கருத்துக்களை தேர்தல் மூலம் தெரிவிப்போம்

(வவுனியா)

நாம் அனைவரும் ஒன்று திரளும் போதே, இழந்த உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். எமது சுய நிர்ணய உரிமையாலே எமது பொருளாதாரத்தை வளர்க்க முடியும். நாம் அனைவரும் எமது மண்ணில் இயல்பு வாழ்க்கை வாழவேண்டுமாயின், எமது ஒன்றுபட்ட கருத்துக்களை நாடாளுமன்றத்தேர்தல் மூலம் தெரிவிப்போம் என - கிளிநொச்சி மாவட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதி ரட்ணேஸ்வரக் குருக்கள் தெரிவித்தார்.

இலங்கை தேசிய சமாதானப் பேரவையும், சேவாலங்கா மன்றமும் இணைந்து - நேற்றுமுன்தினம் வவுனியாவில் நடத்திய மக்கள் கருத்தறியும் நிகழ்வில் உரையாற்றும் போதே - அவர் இந்தக் கருத்தினைத் தெரிவித்தார்.

தேசிய சமாதானப் பேரவையின் அமைப்பாளர் எஸ்.பி. நாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலதரப்பினர் கலந்துகொண்டார்கள்.

எதிர்வரும் பொதுத் தேர்தலையொட்டி, சமாதானம் மற்றும் ஜனநாயகம் தொடர்பான கலந்துரையாடல்களை நடத்துவதற்கும், தமது உணர்வுகளையும், கருத்துக்களையும் முன்வைப்பதற்கு சிவில் சமூகப் பிரதிநிகளுக்குக் களம் ஏற்படுத்திக் கொடுப்பதையும், நோக்கமாகக் கொண்டே நேற்றைய கருத்தறியும் நிகழ்வும் இடம்பெற்றது. (03)

முகமாலையில்

# விடுதலைப்புலி உறுப்பினர்கள் இராணுவத்தினரால் விசாரணை

(யாழ்ப்பாணம்)

முகமாலைச் சோதனைச் சாவடியில் - புலிகள் உறுப்பினர்கள் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் - தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்படுவதாகப் புலிகளின் குரல் வானொலி நேற்றுமுன்தினம் செய்தி வெளியிட்டது.

முகமாலைச் சோதனைச் சாவடியூடாகச் சென்றுவரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் பயணிக்கும் வாகனங்களைத் - துருவித் துருவி ஆராய்வதுடன், விடுதலைப்புலிகள் உறுப்பனர்களையும் நீண்டநேரம் தடுத்துவைத்து, விசாரணை நடத்துவதாகவும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்தல் பிரசாரத்தை குழப்பியதாக சாவகச்சேரி நீதிமன்றத்தில் வழக்கு

(யாழ்ப்பாணம்)

தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவேளை, துண்டுப்பிரசுரம் பறிக்கப்பட்ட சம்பவம் குறித்து, யாழ்.மாவட்ட சுயேட்சைக் குழு முதன்மை வேட்பாளர் ஆனந்த சங்கரி - சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாடு தொடர்பான குற்றப்பத்திரம் நேற்று சாவகச்சேரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த 11 ஆம் திகதி சாவகச்சேரி நகர் பகுதியில் துண்டுப்பிரசுரம் விநியோகித்துக்கொண்டிருந்த வேளை, மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் தமது ஆதரவாளர்கள் விநியோகித்த துண்டுப்பிரசுரத்தைப் பறித்துக் கொண்டு தப்பியோடியதாக - சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஆனந்தசங்கரியின் சார்பில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் ஒன்றைத் தாக்கல் செய்தனர்.

இந்தக் குற்றப்பத்திரத்தை ஏற்றுக்கொண்ட நீதிவான் சம்பவம் குறித்து பூர்வாங்க விசாரணைகளை நடாத்தி, அறிக்கையை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். நீதிவான் வழக்கினை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (202)

## சின்னஞ்சிறு செய்திகள்

### உணவு பதனிடல் பயிற்சி வகுப்பு

(மட்டுவில்)

மட்டுவில் வடக்கு ஸ்ரீவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில், பட்டினிக்கெதிரான நிறுவனத்தினால் - உணவு பதனிடல் தொடர்பான பயிற்சி வகுப்பு நடைபெற்று வருகின்றது.

இந்தச் சனசமூக நிலைய ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த பயிற்சி வகுப்பில் - இந்தப் பகுதியைச் சேர்ந்த சுமார் 32 பெண்கள் பயிற்சி பெறுகின்றனர்.

இந்தப் பயிற்சி வகுப்பை பட்டினிக்கெதிரான இயக்கத்தின் பயிற்சி ஆசிரியை ஜெ.பத்மநாதன் நடாத்தி வருகின்றார். (24)

### ஆன்மீக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவலர்கள் அமைச்சின் யாழ்.மாவட்ட பிராந்திய அலுவலகம், உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையின் ஆதரவுடன், ஆன்மீக நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளது.

இன்று நடைபெறும் இந்த நிகழ்ச்சியில், சிவத்தமிழ் வித்தகர்-சிவமகாலிங்கம் தலைமைதாங்கவுள்ளார்.

மாணவர்களின் பேச்சு, கவிதை ஆகியனவும், ஆசிரியர்களின் உரை, ஆசிரிய மாணவர்கள் இணைந்து நடத்தும் கூட்டுப்பிரார்த்தனை ஆகியனவும் இந்த நிகழ்வில் நடைபெறவுள்ளன.

# செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்புகொள்ளக் கோரிக்கை

கீழே பெயர் குறிப்பிட்ட நபர்கள் அருகிலுள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் காரியாலயத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவித்துள்ளது.

செல்லத்துரை மணிவண்ணன் (சாவகச்சேரி), கஸ்பார் மேரி ஜரிஸ் (சுண்டுக்குளி), மாரிமுத்து கதிரவேலு (சாவகச்சேரி), சொலமன் ஜெயம்மா (மீசாலை), கதிர்காமு சினனத்துரை (சாவகச்சேரி), அப்புத்துரை சரவணமுத்து (சாவகச்சேரி),

வரதராசா பரிமளாதேவி (சாவகச்சேரி), ரத்தினம் அன்னபூரணம் (நுணாவில்), ஐயம்பிள்ளை சிவராசா (மறவன்புலவு), வல்லிபுரம் தங்கமலர் (சாவகச்சேரி),

சண்முகம் நித்தியானந்தம் (மறவன்புலவு), மகேந்திரராசா மேரி எலிசபெத் (புதுக்குடியிருப்பு), சுப்பிரமணியம் தேவி (தாளையடி), சபாரத்தினம் சாந்தி (முல்லைத்தீவு), அம்பலன் ஆனந்தராசா (ஆனைக்கோட்டை), சற்குணநாதன் இளையதம்பி (வரணி) ஆகியோரே அழைக்கப்பட்டுள்ளனர்.

# சுகாதாரத் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கவும்

## சுகாதார அமைச்சுக்குக் கடிதம்

முன்னுரிமை அடிப்படையில் சுகாதாரத் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு - தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

வடக்கு - கிழக்கு பகுதிகளில் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் பல வைத்திய அதிகாரி பிரிவுகளிலும், சுகாதார வைத்தியர் அதிகாரி பிரிவுகளிலும் நிரந்தர பணியாளர்களுக்கு மிகுந்த பற்றாக்குறை நிலவியிருந்தது.

அந்த வேளையில் - சுகாதாரத் தொண்டர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர். இவ்வாறு சேவையில் ஈடுபடுத்தப்பட்டவர்களுக்கான கொடுப்பனவுகள் சரியான முறையில் வழங்கப்படவில்லை. பல நெருக்கடியான சூழலிலும் பணியாற்றியவர்களாக சுகாதாரத் தொண்டர்கள் காணப்படுகின்றார்கள்.

இத்தகைய சுகாதாரத் தொண்டர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கடிதங்கள் வாயிலாகவும், அமைதியான போராட்டங்கள் மூலமாகவும் பலமுறை கேட்டிருந்தனர்.

இவர்களின் இந்தப் பிரச்சினை தொடர்பாக தமிழீழ சுகாதார சேவையினராகிய நாம் பலருடன் பல தடவைகள் தொடர்புகொண்டு தெரிவித்தோம்.

தற்போது, பலரது வேண்டுகோளுக்கு இணங்கி மருத்துவமாது பயிற்சிக்கு ஆட்சேர்ப்புச் செய்யவுள்ளதாக அறிகின்றோம். எனவே, இவர்களுக்கு முன்னுரிமை வழங்குவார்கள் என நம்புகின்றோம்.

இந்தப் பயிற்சி நெறிக்கு தகுதி பெற முடியாத சுகாதாரத் தொண்டர்களை - வேறு பணிகளில் நிரந்தரமாக அல்லது தற்காலிக நியமனம் வழங்கி, நடவடிக்கை எடுக்குமாறு வேண்டிக்கொள்கின்றேன்.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

பதினோராவது அகவையில்



பெயர் : அ.மெஸ்ரூன் நிஷா
முகவரி : உயரப்புலம், ஆனைக்கோட்டை.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:----------------

முகவரி:----------------

பிறந்த ஆண்டு:----------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------
பெற்றோர்


# பொருட்களை சேமிக்குமாறு மன்னார் அரச அதிபர் கோரிக்கை

(மன்னார்)

மன்னார் பகுதியில் தேர்தல் காலங்களில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயர்வதனால், பொதுமக்கள் தமக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை சேகரித்துவைக்குமாறு - மன்னார் அரச அதிபர் கேட்டுள்ளார்.

தேர்தல் காலங்களில் அத்தியாவசியப் பொருட்களான - அரிசி, மா, சீனி போன்ற பொருட்களும், மண்ணெண்ணெய் போன்ற பொருட்களின் விலைகள் உயர்வடைவதால், பொதுமக்கள் தமக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்து, சேகரித்து வைக்குமாறு அரச அதிபர் கேட்டுள்ளார்.

குறிப்பாக வெதுப்பக உரிமையாளர்கள் ஒரு மாதகாலத்திற்கு தேவையான மாவை கொள்வனவுசெய்து, எதிர்வரும் தேர்தலில் அத்தியாவசியப் பொருட்களின் விலையுயர்வை, தட்டுப்பாட்டை இல்லாது ஒழிக்க ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.



சுன்னாகம் சிவன் முன்பள்ளி விளையாட்டுப் போட்டியின்போது, சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட - தெல்லிப்பழை ப.நோ.கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.சி[illegible]காராசா - வெற்றிபெற்ற மாணவன் ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# 26 இந்திய மீனவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்தவேளை - கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள 26 இந்திய மீனவர்களுக்கு எதிராக - யாழ். மேல் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகளில் சட்டமா அதிபர் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்தவேளை, இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 67 இந்திய மீனவர்களுக்கு எதிரா கவே - யாழ்.மேல்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படவிருப் பதாகத் தெரியவருகின்றது.

இவர்களில் 15 பேருக்கு எதிராக ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டு, விசாரணைகள் இடம்பெற்றுள்ளன.

இவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி 12 பேருக்கும், மறுநாள் 14 மீனவர்களுக்கு எதிராகவும் வழக்குத்தாக்கல் செய்யவுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (202)






# கலைஞனுக்கு ரசிகர்களின் கைதட்டல்கள் எதனாலும் ஈடுசெய்ய முடியாத பரிசாகும்

**அழகும், குயிலின் குரலும், கலையின் மெருகூட்டலும் கூடவே அதிகமாகக் காணப் பட்டிருந்த ரோகினி மருதவாணர் என்பவரை முருகன் உலாவரும் பின்வீதியிலே அமைந் துள்ள 314 , கோயில் வீதி, நல்லூர் என்னும் முகவரியிலுள்ள அவரது வீட்டிலே நேர்காணல் ஒன்றிற்காகச் சென்றபோது அழைக்கப்பட்டு உட்சென்றேன்.**

"தைதோம் தித்தித்தோம் தொலைவில் நின்றும் சந்தித்தோம்" என்றில்லாமல் மிக அருகில் கலையினை வீட்டுக்குள்ளே வர வழைக்கப்பட்டுப் பல வடிவங்களாகக் காட்சி



ரோகினி மருதவாணர்

தந்து, மீன்செதிலில் செய்த பூச்சாடி மேல் பூத்திருந்ததுபோல் கடதாசிப்பூக்கள், மண்பா னையின் மேல் விதைக்கப்பட்ட நெற்கள் சேர்ந்து அழகூட்டிய கூசா. குருவி வாழ்ந்த கூடு. மரத்திலிருந்து தவறி வீழ்ந்ததால் வீட்டிற்குள் இருப்பிடம் கொண்டது பூச்சாடி யாக. இப்படியாகக் கலையினைச் சிறப்பாக அமைப்பதற்கு, எனது பார்வையில் இயற்கை மீது அழகுத்திறன் கூடவே இருக்கிறது. என்று எதிலும் அழைக்கின்றது, என்று சொல் லாமல் செயலில் காட்டியிருக்கின்றாள்.

எனது பிறந்த இடம் வட்டுக்கோட்டை. வயல்கள் விதைத்தபோதும், நெற்கதிர்கள் அறுத்தபோதும், அழகாக இருக்கும். நான் படித்த பாடசாலை, எனது நண்பிகள், உற வினர்கள், அயலவர்கள், கூடிப்பழகிய அன் றைய நாட்கள், ஓடித்திரிந்த வீதிகள், பாட சாலை அறைகள், நான் எங்கே போனாலும் மறக்கமுடியாது. கிராமத்தினையும், நகரத்தி னையும் ஒப்பிட்டுப் பார்க்க முடியவில்லை.

ஒதுங்கிய நேரம், வழிவிட்ட பாதை நகரத் தில் இல்லை. நெருக்கடிகள் சூழ்ந்த பகுதி யாக இருக்கின்றது. வாழ்க்கைக்கு ஒத்துப் போன கிராமப்புறம், வாழவைப்பதற்காக ஒத் துப்போகவேண்டிய நகர்ப்புறம்.

பழகுகின்ற தன்மை வித்தியாசப்படுத்தும், மனிதர்களில் பெண்கள் ஒரு வரையறை வைத் திருத்தல் அவசியம். ஏனெனில், பெண்க ளோடு பழகும்போதும் சரி, ஆண்களோடு பழ கும்போதும் சரி ஒரு (Limit) அளவு இருத் தல் அவசியம். அப்போதுதான் பெண்ணுக்கு நல்ல பெயர் கிடைக்கிறது. வீதியில் செல் கின்ற பெண்ணைப்பார்த்துவிட்டு, இவளை அடிக் கடி வீதியில் காண்கிறனான் என்று அவளது பெயரை கெடவைக்கின்ற சமூகம், வீட்டில் இருக்கிற பெண் நல்லவள். அடக்க ஒடுக்கமானவள் என்று சொல்லுவதில் மட் டும் இருந்து விடுகிறார்கள். வீட்டில் அடை பட்டு இருக்கின்ற பெண்களும் ஏன் வெளி யில் வரவில்லை என்று யாரும் எதிர் பார்ப் பதில்லை. அது சம்பந்தமாக கதைப்பது மில்லை. இப்படியான சூழலில் நல்லது செய் தாலும் அவப்பெயர்தான். கூடாதுசெய்தாலும்

பர்தான். பெண்ணுக்கு இந்த நிலை ண்டும்.

4 வயதிலிருந்து நடனம் பழக, வீட டுக்கு வரும் பிள்ளைகளைப் பார்த்தால் இதில் ஆர்வம் கூடுதலாகவே இருக் கின்றது என்று நம்பத்தகமாக இருக் கின்றது. அதாவது சில பிள்ளை கள் ஆர்வத்தோடு வருகிறார்கள். சில பிள்ளைகள் கற்பதற்காக வரு கிறார்கள். ஒன்றில் பிள்ளைக்கு ஆர்வம் இருக்கின்றது. அல்லது பெற்றோர்களுக்கு ஆர்வம் இருக் கின்றது. அதிலிருந்து ஒன்றினைத் தெரிந்து கொள்ளலாம். இந்தக் கலை மேலும் மேலும் வளர்ந்து விடும் என்பதனை. வீட்டில் வேலைப பழு கூடுதலாக இருந்தாலும், பிள் ளைகளைப் பார்த்தால் ஒரு சந்தோ ஷம், மனதில் மகிழ்ச்சி ஏற்படும். எப்படிக் கஷ்டங்கள மறைந்து போகின்றன என்றே, எனக்குத் தெரிய

வில்லை. மனம் எவ்வளவு ஈடுகொடுக்கின்றது நடனத்திற்கு. ஆடும்போது, மனதில் உற்சாகம், உடற்பயிற்சி இவைகள் உடலுக்குத் தீங்கு விளைவிக்க இடங்கொடுக்கப்போவதில்லை. எல்லாவற்றையும் மறந்து, மனதிலே எந்தவித சலனமும் இல்லாமல் மழைவந்து நனைப்பது போல, அதிலும் ஈரத்துணி போர்த்தினது போல எனது மனம் துளிர்க்கின்றது.

பாடசாலைகளில் படிக்கின்ற காலப்பகு திகளில், அங்கே நடைபெறுகின்ற எல்லா நிகழ்ச்சிகளிலும் ஆடி இருக்கின்றேன். பின்பு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற எல்லா நிகழ்ச்சிகளிலும் ஆடி இருக்கின்றேன். இப்பொ ழுது எனது மாணவர்களை மேடை ஏற்றி வருகின்றேன். எனது மேடைநிகழ்ச்சியில் கிடைக்கின்ற திருப்தியைவிட, எனது மாண வர்களின் மேடை ஏற்றங்களில்தான் எனக்கு கூடுதலாகத் திருப்தி ஏற்படுகிறது. எந்தக் கலைஞனுக்கும் தகுதிச்சான்றிதழ், பாராட்டு என்பன போதுமானதல்ல. அதற்கு மேலாக ரசி கர்களின் கைதட்டல் தான் வரவேற்கத்தக்கது. என்றைக்கும் ஈடுசெய்யமுடியாததாகும்.

விடுதலை வேண்டும், விடுதலை வேண்டும் என்று பெண் - மேடை போட்டுச் சொல்வதால் எந்தப்பயனும் இல்லை. அவர்கள் முதலில் நன்றாகவே புரிந்துகொள்ள வேண்டும். அதனூ டாகவே செயல்படுத்த வேண்டும்.

நட்பானது - எந்த உறவிலும் மேலானது. எந்தப்பிரச்சினை என்றாலும் நண்பிகளிடம் கதைப்பதால் பிரச்சினைக்கு வழிகிடைத்து விட்டதுபோல மனம் ஆறுதலடையும். திறந்த மனதுடன் கதைக்கக்கூடிய வாய்ப்பு இதற்கு மட்டும் இருக்கிறது. பலநாட்கள் கழிந்து, முன்னைநாள் நண்பி ஒருத்தி வந்தால், எனக்கு இனி இல்லை என்ற சந்தோஷம் ஏற்படும். கண்டிப்பாக எல்லோருக்கும் நண்பர்களோ, நண்பிகளோ இருக்கவேண்டும். அப்பொழுது தான் வாழ்க்கையில் ஒரு முழுவதுமான ஒரு திருப்தி ஏற்பட்டதுபோல இருக்கும். எனது வீட்டிற்கு வந்து உரிமையோடும் தூக்கத் தினைக் களைத்தும், எனக்கு அடித்தாலும் கூடு தலான சந்தோஷம் நண்பிகளால் ஏற்படும்.

நடன நிகழ்ச்சிகளுக்கு வருகின்ற ரசிகர்கள் குறைவாகத்தான் இருக்கின்றார்கள். ஏனெனில், இதில் ஆர்வம் இல்லாதவர்களாக இருக்கின் றார்கள். வீட்டிலே தொலைக்காட்சி இருப்பதா லும் இதற்குக் காரணமாக இருக்கின்றது. அடுத்ததாக நடன நிகழ்ச்சி அரங்கேற்றத்திற்கு முதல் அரங்கேற்றம் நடைபெறும் இடம், நல்ல அழகாக வடிவமைக்கப்பட்டு, கலைஞர்களையும் ஊக்குவித்து, பார்வையாளர்களை இந்தப் பக்கம் இழுக்கக்கூடிய விதத்தில் ஆயத்தங்களை மேற் கொண்டு, மேடை அமைப்பினை மேற்கொண்டு, மண்டபத்தினை அழகுபடுத்தி, பார்வையாளர் களைப் பிரமிக்கும் விதத்தில் நிகழ்ச்சிகளை அரங்கேற்றினால் நிறைய பார்வையாளர்கள் வருவார்கள். யாழ்ப்பாணத்தில் நிறைய அரங் கங்கள் இருக்கின்றது. ஆனால், பார்வையாளர்கள் குறைவாகத்தான் இருக்கிறார்கள்.

சினிமாவில் வந்து கருத்துக்கள் தப்பாக இருந்தாலும், அவன் கொடுக்கின்ற அழகும் அதற் கமைய வடிவமைப்புக்களும்தான் அதனை பார்க் கத் தூண்டுகின்றது. அதேபோல் நமது கலை யினையும் வளரச் செய்யமுடியும். எனது மாணவர் களை மேடை ஏற்றும்போது பல பிரச்சினை களை எதிர்நோக்கி இருக்கின்றேன். அதாவது அதற்கான செயற்பாடுகளில், மாணவர்களை ஒழுங்கமைத்து, அவர்களுக்குத் தேவையான உடைகளை எடுத்து பக்கவாத்தியக்காரர்களை கூட்டிவந்து மேடை ஏற்றும்போது மட்டும் பெரிய சிக்கல்தான். ஏனெனில், இன்றைய காலத்து மாணவர்கள். பல துறைகளில் ஈடுபடுகின்றார்கள். அதாவது கணனி முறை, இப்படியாக பல தொழில் நுட்பத்துறைகளில் கூடுதலாக ஆர்வம் காட்டு கினறார்கள். இதனால், எதையும் கூடுதலாக விரும் பும் மனோநிலை இன்றைய காலத்து மாணவர் களிடம் இருக்க வாய்ப்பிருக்கவில்லை. எதையும் படிப்பு மட்டத்தில் வைத்திருக்கின்றார்கள்.

பெண்களோ, ஆண்களோ எதையும் புறக்க ணிக்காமல், எல்லாவற்றிலும் ஆர்வம் கொண்டு எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளுவதால் தேவையான சந்தர்ப்பங்களில் பயன்படக்கூடிய தாக இருக்கும்.

வானத்து நீலம், கடலிலும் படர்ந்து கிடக்கின் றது. அதிசயமாய் பூக்களிலும் எனக்குப் பிடித்தது நீலம். எனது கண்ணுக்குள் நிறைய இருக்கின் றது. இயற்கையாக பொருட்களை எடுத்து, கலைப் பொருட்களைச் செய்யவேண்டும் என்று தேடித் தேடி எடுப்பேன்.

சீதனம் தேவை என்ற ஒரு போக்கு இந்தச் சமூ கத்திலே தோன்றிவிட்டது. இதனால், பெண்ணா னவள் பெரும் கஷ்டத்திற்கு உள்ளாக்கப்படுகின் றாள். இதற்குக் காரணமான பெண்தான் இருக் கிறாள்.

பெண்கள் சீதனம் கொடுப்பதை நிறுத்தி னால், ஏனைய பெண்களின் வாழ்க்கையும், நன்றாக அமையும் என்று யாரும் நினைப் பதில்லை. இருக்கின்ற அளவுக்கு மீறிச் சீத னம் கொடுத்தால்தான் இந்தப் பிரச்சினையும் உருவாகின்றது. சீதனம் இல்லாமல் காதல் திருமணம் வழிவகுக்கும் என்று சொல்லு வார்கள். இதுவும் நடைமுறைக்குள் உட்ப டாத ஒரு செயலாக இருக்கின்றது. இன்றைய காலத்துக் காதல்கள், பெண்ணை அழிவுப் பாதைககு இட்டுச் செல்கின்றது.

காதலினைப் புனிதமாக யாரும் கைக் கொள்வதில்லை. எங்களுடைய சமூகத்தில் பெண்ணுக்கு இரண்டு பக்கமும் ஏதோ ஒரு பிரச்சினையை தோற்றுவித்துக் கொண்டிருக் கின்றது. இதற்குக் காரணம் பெண்கள்தான். அதாவது பையனைப்பெற்ற தாய்தான் விரும்பு கின்றார். அழகான பெண்ணை, கூடுதலான சீதனம் வாங்கி எனது மகனுக்குச் செய்து வைக்க வேண்டும் என்று, ஆகவே முதலில் பெண்மாறவேண்டும்.

இராமநாதன் நுண்கலைத்துறையில் படிப் பதற்காக யாழ்ப்பாணம் வந்து 4 வருடங்கள் டிப்பிளோமா பட்டப்படிப்பு படித்து, பின் வெளி வாரிப்பட்டப் படிப்பின் ஊடாக நுண்கலை மானிப்பட்டம் பெற்றேன். சங்கீதத்தால் வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சையில் கலா வித்தகர் · பட்டம் பெற்றேன். ஒரு வருடம் இராமநாதன் நுண்கலைத் துறையில் போத னாசிரியராகவும், அடுத்தவருடம் அதீத போத னாசிரியராகவும் கடமையாற்றினேன்.

தற்போது பாடசாலையினை எதிர்பார்த்து இருக்கின்றேன். ஆரம்பத்தில் நடனத்தை குகா நந்தினி இராதாக்கிருஷ்ணரும், பின்பு கொக்கு வில் கலாபவன ஆசிரியர் திருமதி சாந்தினி சிவ நேசனிடமும் படித்தேன். அதுமட்டுமல்ல, வயலின், வாய்ப்பாட்டு, அழகுக்கலை போன்ற கலையும் கற்றுள்ளேன்.

யாழ். மத்தியகல்லூரியில் கடைசியாக நடைபெற்ற அழகுக்கலை பற்றிய பொருட் காட்சியில் எனது கலைப்படைப்புக்களும் வைக்கப்பட்டிருந்தன. இதில் எனக்கு இரண் டாவது இடம் கிடைத்தது. என்று சிறிய புன னகை தவழும் முகத்துடன் சொல்லி முடித்தார்.

நேர்காணல் - செல்வா.

---

## கோடைக் காலத்து வெய்யிலில் அதிகமாக சருமம் பாதிக்கப்படுகிறது



**வே**னிற்காலம் தொடங்கி விட்டது. வியர்வையினால் ஏற்படும் தொல்லையும்,அரிப்பும், பிற சரும நோய்களும் இதனால் சற்று அதிகமாகவே இருக்கும். ஆனால, வியர்வை ஏற்படுவது இயற்கையாக நம்முடைய உடலுக்குக் கிடைக்கும் பாதுகாப்பு என்றே எடுத்துக்கொள்ள வேண்டும். வியர்வை மட்டும் இல்லாவிட்டால், வெளியிலுள்ள சூடு போலவே உடம்பிலும் சூடு தங்கிவிடும். இது விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தககூடும்.

வியர்வையைச் சமாளிக்க இயற்கையான காற்று கிடைக்கும் இடத்தல் இருப்பதும், உலாவுவதும், தூங்குவதும் நல்லது. ஒரு நாளைக்கு இரண்டுமுறை குளிக்க வேண்டும். எண்ணெய்ப்பசை அற்ற சருமததுக்கு ஏற்ற சோப்பை உபயோகிக்க வேண்டும். வியர்க்குரு வராமலிருக்க கனமானதூள் (Coarse) கொண்ட பவுடரை உபயோகிக்கலாம். பவுடர் போட்டுக் கொண்டால் சருமத்தின் துவாரம் அடைபட்டு விடும் என்று நினைப்பது தவறு.

வெயிற் காலங்களில் பால் விரைவில்தயிராக உறைந்து விடுகிறது. இதற்குக் காரணம் பக்டீரியா செயல்பாடுதான் இதேபோல, உடம்பின் சருமத்திலும் விரைந்து இயங்கி இந்தப் பாதிப்பை உண்டாக்குகிறது. இதனால், குறிப்பாக அக்குள் பகுதிகளில் படை (Fungus) பங்கஸ் உண்டாகிறது. இதற்கு இந்தப் பகுதிகளில் சோப்பை உபயோகிக் காமல் தேய்காய் எண்ணையைத் தடவி ஊற வைத்து, பயற்றமாவை அல்லது கடலை மாவை உபயோகித்து சுத்தப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இறுக்கமான உடைகளை அணியக்கூடாது. போட்டுக்கொண்ட துணியை மீண்டும் துவைக்காமல் உபயோகிக்கக் கூடாது. கூடியவரை காற்றுப்புகக்கூடிய நூல் ஆடைகளை உபயோகிப்பது நல்லது. மருத்துவரின் ஆலோசனையுடன் பற்றீரியாவை அழிக்கக் கூடிய கிறீம்கள் உபயோகிக்கலாம்.

வெயிற்காலத்தில் வேனிற்கட்டிகள் வரக்கூடும். உடம்பில் திறந்த பாகத்தில் இவை அதிகமாக ஏற்படும். கூடுதலாக நெற்றியிலும் தலையிலும் ஏற்படக்கூடும். தலையில் வியர்வையின் அடர்த்தியைக் குறைக்கத் தலைக்கு நீர்ஊற்றி தேய்த்துக் குளிப்பது நல்லது, பெண்கள் வாரத்துக்கு மூன்று தடவைகளாவது தலைக்குத் தண்ணீர்விட்டு அலசிக்குளிப்பது நல்லது. அப்போதுதான் வியர்வையின் பாதிப்பு ஓரளவு குறையும்.

கோடைக் காலத்தில் வெய்யிலில் அதிகமாக சருமம் பாதிக்கப்படுகிறது. சூரியக்கதி கர்களின் பாதிப்பை சருமத்தில் நிறக்குறைவு, வெடிப்பு, பிளவு, போன்றவற்றுக்குக் காரணமாகிறது. இயற்கை ஓரளவு இதைச் சரிசெய்தாலும், சுருக்கம், தோல் வெடிப்பு நாளடைவில் சருமப்புற்று நோய்க்கும்கூடக் காரணமாக அமையக்கூடும். சூரியக்கதிர் பாதிப்பு நமது வாழ்க்கையில் முதல் பதினெட்டு ஆண்டுகளில் தான் அதிகம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஆகையால, இந்த இளமைப் பருவத்தில் பாதுகாப்பு அவசியம்.

பொதுவாகவே எல்லோரும் பகல் பதினொரு மணிக்குள் வெளியே வெய்யில் செல்ல வேண்டிய வேலைகளை முடித்துக் கொள்வது நல்லது.

---



## புற்றுநோயை விரட்டும் உணவுகள்

**புற்றுநோய் என்ற வார்த்தை கார்சினோமா என்ற சொல்லிருந்து உருவானது. இதன் பொருள் நண்டு என்பதுதான். பீற்றூட் ஜூஸ் புற்றுநோய்வராமல் தடுக்கும் ஆற்றல் கொண்டது. முட்டைகோஸ், கரட், திராட்சை, எலுமிச்சை, ஆரஞ்சு போன்ற வை நல்லது. வெங்காயம், பூண்டு புற்றுநோய்க்கு எதிரி. பப்பாளி இலைகள் மருத்துவ குணமிக்கவை. தக்காளி, நெல்லி புற்றுநோயை வராமல் தடுக்கும் ஆற்றல் கொண்டவை.**

# பிஞ்சுமுகத்தின் தேடல்

எனக்குத் தயக்கமாக இருந்தது. எப்படிக் கேட்பது? இனிமேலும் கேட்காமல் இருக்க முடியாது. நான் இன்றைக்கு எப்படியாவது கேட்கவேண்டும். விறகுக்குவியலில் குந்திக் கொண்டிருந்த என்னைக் காலடிஓசை திரும்பிப்பார்க்க வைத்தது. வேறுயாருமில்லை. பெரியக்காதான் பக்கத்தில் வந்துநின்றாள். அவளுடைய முகம் வீங்கிக்கிடந்தது. அக்காவுக்கு என்ன வருத்தம்? வயிறு உப்பிக் கிடக்குது. வீட்டில அவளை எல்லோரும் ஏசுகிறார்கள். ஆனால் அவளோ வாயே திறக்கமாட்டாள். அவளுக்கு என்ன நடந்தது. என்னுடைய தலையை அக்கா தடவுகிறாள். எனக்குக் கூச்சமாக இருக்கிறது. அவளுடைய கையைப் பற்றுகிறேன். கைநெருப்புக் கொள்ளி போலச்சுடுகிறது. விரல்கள் எல்லாம் காய்ந்து கறுத்து, சொர சொரவென்று இருந்தன. அவள் மெல்ல எனக்குப்பக்கத்தில் இருந்தாள். நான் அவளை என்மடியில் படுக்கவிட்டேன். குனிந்து அவள் கண்களைப் பார்த்தேன். அந்தக் கண்களில் என்னைவிட இன்னொரு உருவம் தெரிந்தது. எட! அந்த மாமா!.... என் நினைவு சுழன்றது.

எங்கடை குடும்பம் பெரிய குடும்பம். அப்பாவும், அம்மாவும் எட்டுப்பிள்ளைகளும். எல்லாமாகப் பத்துப் பேர். அம்மாவும், அப்பாவும் கூலிவேலைக்குப் போவினம். அப்பா மேசன் கூலி. அம்மா பீடி சுத்தப் போறவ. காலமை இரண்டு பேரும் போனா, பின்னேரம் எரிபொழுதுக்கை வருவினம். நாங்கள் எட்டுப் பேரெண்டாலும் ஆறுபேர் பள்ளிக் கூடம் போய் விடுவினம். பெரியக்காவும் நானும் தான் வீட்டில். அக்கா நல்ல சிவப்பி. நான் நாவற்பழ நிறமெண்டு சொல்லுவினம். இடையில் ஒருத்தன் அண்ணன். அவன் புட்டுப் பானைக்கரி. எனக்குக் கடைக்குட்டி என்று கொஞ்சம் செல்லம். வாறவருசம் பள்ளிக்கூடம் போக வேணும். எனக்கெண்டா அது விருப்பமில்லை. வீட்டில நிக்கிறதுதான் விருப்பம். பகல் முழுக்க அக்காவோட திரிவன். பின்னேரம் மற்ற அக்கா வந்தவுடனை நான் அம்மன் கோயிலடியில விளையாடப் போய்விடுவன். பெரியண்ணாமார் வந்து கால்ப்பந்து விளையாடுவினம். நல்ல வேகமாக விளையாடுவினம். அம்மன் கோயிலடியில நிறைய முழு நெல்லிக்காய் மரங்கள். நிறையக் காய்ச்சுக் கிடக்குது. ஒரு கல்லெடுத்து எறிஞ்சால் 25 காய் கொட்டும். அதைத் திண்டுபோட்டு கோயில் கிணத்தில தண்ணி குடிக்க நல்லாய் இனிக்கும். பசியும் அடங்கிவிடும். அம்மா பின்னேரந்தான் சோறு காய்ச்சுவா. மத்தியானம் நானும் அக்காவும் கீரை போட்டு குரக்கன் புட்டு அவிச்சுச் சாப்பிடுவம். அதுக்கு அக்கா செத்தல் மிளகாயில நல்ல உறைப்புச் சம்பல் தருவா. நான் நல்லா உறைப்புச் சாப்பிடுவன். அக்கா பேசுவாள். அளவுக்கு மிஞ்சின காரம் திண்டு, கறுத்துப் போனாயடி!. நான் சொன்னன் - 'ஆனை கறுத்தாலும் ஆயிரம் பொன் பெறும்' அக்கா சிரிப்பாள். போடி விசரி! அது ஆம்பிளையளைத்தான்ரி சொல்லுறது. பெட்டையள் கறுப்பெண்டால் கலியாணம் கஷ்டம்தான். அப்ப உனக்கு கஷ்டமில்லையக்கா! "என்னவோ பாப்பம்" அக்கா அலுத்துக்கொண்டே சொன்னாள்.



கலியாணம் கட்டிவைக்கிறது ஒரு பெரிய கஷ்டமான வேலையாம். அம்மாவும், அப்பாவும் இரவில் கதைக்கிறது எனக்குத் தெரியும். "ஏழு பெட்டையளைப் பெத்துப்போட்டம்! எப்படிக்கரைசேர்க்கப் போறமோ தெரியேல்லை!" அம்மாதான் முதலில் தொடங்குவாள். நீ ஏன் அலட்டிறாய். அவளுகள் நல்ல பலன் காறியள். மாப்பிளையள் தானாய் வருவினம்! நீ சும்மாயிரு! அம்மா சொல்வாள் "உங்களுக்கு என்ன தெரியும் ஒரு பெட்டைக்குச் செய்துவைக்க எவ்வளவு குடுக்க வேணும் தெரியுமே. கூலிவேலைக்காறன் எண்டாலும், வீடு வளவு நகை நட்டு எண்டு கொடுக்க வேணும்". அப்பாவுக்குக் கோபம் வந்தது. நீ என்னைக் கலியாணம் செய்யேக்க என்னடி கொண்டுவந்தனி! அம்மாவும் தொடர்ந்தாள். அந்த நாளையில முன்னாலையும் பின்னாலையும் திரிஞ்சு என்னைக் கட்டினால் சரி! இல்லாட்டில் பொலிடோல் குடிப்பன் எண்டு வெருட்டிக்கட்டிப்போட்டு இப்ப சீதனங்கேக்கிறார்!. அப்பாவின் குரல் அதோட அடங்கிப் போச்சு. எனக்கும் நித்திரை வந்திட்டுது.

அக்காவுக்கு கனக்க மாப்பிள்ளை பார்த்தாச்சு. எல்லாம் காசுப்பிரச்சினையில் குழம்பிப்போடும். எனக்கும் அக்காவின்ர கலியாணம் பார்க்க ஆசை. அம்மா அம்மனுக்கு நேர்த்தி வைச்சிட்டா. ஆனால், மாப்பிள்ளை... வரவில்லை. ஆறு மாசத்திற்கு முந்தியிருக்கும் ஒரு நாள் மத்தியானம் கேற்றுக்கை சைக்கிள் மணியடிச்சுக் கேட்டுது. நான் தான் ஓடிப்போனன். அக்காவும் பின்னால் வந்தா.

ஒரு கறுத்த மாப்பிள்ளை.... சீ வாய் தவறிச் சொல்லிப் போட்டன். அப்பா மாப்பிள்ளையள் தானா வருவினம் எண்டு சொன்னது எனக்கு நல்லா மனதிலை பதிஞ்சு போச்சு. வந்தது எங்கடை பக்கத்துக் காணிச் சொந்தக்காரர். அவரும் அண்ணையைப் போல அட்டைக் கரிதான். வெயிலுக்கு வந்ததால் அவருக்கு வேர்த்து வடிஞ்சுது. அக்காதான் கேட்டாள் என்னவேணும். கொஞ்சம் தண்ணி குடிக்க வேணும். அக்கா என்னட்டைச் சொன்னாள் மலர்! ஓடிப்போய் செம்பில தண்ணி எடுத்துக் கொண்டுவா! கழுவிப் போட்டுக் கொண்டுவா! ஏன் இவ போய்க் கொண்டுவாறதுக்கு என்னைக் கலைக்கிறா! எனக்கு அவவின்ர கட்டளை பிடிக்கல்லை. எண்டாலும் அவரை ஒரு பார்வை பார்த்தன். நல்ல வெள்ளைச் சேட்டு! கறுத்தக் காற்சட்டை. கையில மணிக்கூடு. சைக்கிளவிட்டிறங்காமல் நாய் மூத்திரம் பெய்யிறமாதிரி நிண்டார். நான் போய்த் தண்ணி கொண்டுவந்து கொடுத்தன். குடிச்சுப் போட்டுச் செம்பைத் தந்தார். மலர் இந்தா! பொக்கெற்றுக்கிள்ள கையை விட்டு அஞ்சாறு ரொபியை எடுத்துத்தந்தார். நான் வேண்டேல்லை. அக்காவின் கையில குடுத்திட்டு சைக்கில்ல ராசா மாதிரிப் போனார்.

இதுக்குப் பிறகும் அவர் 10 மணி போல வீட்டை வருவார். நான் அவரைக் கவனிப்பதில்லை. அக்காவோடதான் கதைப்பார். அக்காவும் அவர் வந்தால் என்னைக் கவனிக்கமாட்டாள். பின்னால வாழைத் தோட்டத்துக்க நிண்டு இரண்டு பேரும் கதைப்பினம். அம்மாவிட்ட நான் இதைப்பற்றிச் சொல்லேல்ல. எனக்கு அக்காவை அவர் பார்க்கிற பார்வை மட்டும் சரியில்ல எண்டு மட்டும் ஏதோ சொன்னது. "அவிச்ச மீனை பூனை பார்க்கிறதுபோல, அவர் அக்காவைப் பார்த்துக் கொண்டிருப்பார். போனகிழமை அவர் வெளிநாடு போட்டாராம் எண்டு ஒரு கதை வந்துது. அம்மாதான் சொன்னாள் அக்காவுக்கு அண்டையில இருந்து மனம் சரியில்லை. முகமும் அதுக்குப்பிறகு இருண்டு போச்சு. முந்தநாள் மத்தியானம் நல்ல வெயில்! அக்கா பின்கோடிக்க சீயாக்காய் அரைக்கிற அம்மியில பச்சையாய் ஏதோ அரைச்சுக் கொண்டிருந்தாள். நான் அண்ணையின்ர கலர்ச் சோக்கட்டியை எடுத்துச் சுவரில தோடம்பளம் கீறிக் கொண்டிருந்தன். எதிர்பாராமல் அம்மா வந்தாள். "எங்கயடி கொக்கா" அம்மா பத்திரகாளி அம்மன் போல பின்கோடிக்க போனாள். நானும் சோக்கட்டியை எறிஞ்சு போட்டு பின்னால ஓடினன். யாரடி அவன்! அம்மா அக்காவின்ர பின்னலைப்பிடிச்சு முகத்தில போய்க்கையால அடிக்க அக்கா சுருண்டு கீழ விழுந்தாள். அக்கா அப்படியே மயங்கிப் போனாள்.

வீட்டில ஆரோ செத்துப் போனமாதிரி சோகம்தான். அப்பாவும், அம்மாவும் வேலைக்குப் போகேல்ல. அண்ணா அக்காவையும் பள்ளிக்கூடம் போகேல்ல. அக்கா அறைக்க தான். ஒருத்தரோடையும் கதைக்கிறதில்லை. ஒழுங்கான சமையலுமில்லை. எல்லோரும் பட்டினிதான். இண்டைக்கு நான் ஒரு முடிவு எடுத்துப்போட்டேன். அக்காவிட்ட என்ன விசயம் என்று கேட்க வேண்டும். விறகுக்குவியலில் இருந்துகொண்டு பின் வளவு வாழைகளைப் பார்க்கின்றேன். ஒரு பெரிய வாழை பொத்தி தள்ளியிருந்தது. அண்டைக்கு அக்கா அதைக்காட்டி அவருக்கு ஏதோ சொன்னதை நான் கண்டது ஞாபகம் வந்தது. அம்மா அக்காவிடம் கேட்கும் யாரடி! அவன்! சொல்லடி! என்ற குரல்... எனக்கு ஏதோ விளங்குவது போல இருந்தது.

மடியில் கிடந்த அக்கா கண்ணைத் திறந்தாள். என்ரை கையை அழுத்திக் கொண்டு சொன்னாள், மலர் நான் நம்பிக் கெட்டுப் போனன். அம்மாட்டைச் சொல்ல முடியேல்ல. உன்னட்டை சொல்லுறன். அவர் கலியாணம் கட்டுறதெண்டு சொல்லி என்னை ஏமாத்திப் போட்டார். நான் அக்காவின் உப்பிய வயிற்றின் மேல் கையை வைத்தேன். என்கையை உள்ளேயிருந்து யாரோ பிடிப்பதுபோல இருந்தது... நான் அதை உணர்ந்தபோது அம்மா எங்களை நோக்கி வருவது தெரிந்தது. இனி நான் எதையும் கேட்கவேண்டியதில்லை.

**மனோன்மணி சண்முகதாஸ்.**

# உங்கள் குழந்தைக்கானது...



பெற்றோர்களாக இருப்பது ஒரு நிறைவேறிய அனுபவத்தை வழங்குகிறது. தங்கள் குழந்தைகள் பத்திரமாக இருப்பதை உறுதி செய்ய பெற்றோர்கள் சாத்தியமான வழிகளில் முயற்சி செய்கின்றனர். பல சமயங்களில் தங்கள் குழந்தைகளின் உடல் நலத்தைப் பாதுகாக்கத் தங்கள் சக்திக்கு மீறிச் செலவழிக்கின்றனர்.

எம்எம்ஆர் தடுப்பூசி என்பது என்ன?

சின்னம்மை, புட்டாளம்மை மற்றும் ரூபெல்லா போன்ற மூன்று நோய்களுக்கான இணைந்த தடுப்பூசி இது.

9 ஆவது மாதத்தில் கொடுக்கப்படும் சின்னம்மைத் தடுப்பூசி போதுமானதாக உள்ளதா?

9 ஆவது மாதத்தில் கொடுக்கப்பட்ட சின்னம்மைத் தடுப்பூசி, 15 சதவீதம் குழந்தைகளில் பயனற்றதாகவுள்ளது.

☆ ரூபெல்லா நோய் என்றால் என்ன?

ரூபெல்லா நோயால் பாதிக்கப்பட்ட தாய்மாருக்கு அங்கவீனத்துடன் கூடிய குழந்தை பிறக்கநேரிடும். தாய்மார்களின் குழந்தைப் பருவத்தில், அல்லது கருத்தரிப்பதற்கு முன் தாய்மார்கள் இத்தகையை தடுப்பூசி போட்டுக் கொள்ளாததால் ரூபெல்லா நோய்த் தாக்குதல் ஏற்படுகிறது.

இத்தகைய குழந்தைகள் கண்பார்வையற்றதாக, காது கேட்காததாக அல்லது 'இருதயத்தில் துவாரம்' என்று அழைக்கப்படும் இருதயக் கோளாறுடன் பிறக்க நேரிடும். சில சமயங்களில் கருச்சிதைவுகளும் ஏற்படலாம்.

☆ பெண்குழந்தைகளுக்குத் தான் இந்தத் தடுப்பூசி தேவைப்படுகிறதென்று அர்த்தமா, ஆண் குழந்தை பற்றி என்ன? ஆண் குழந்தைகளுக்கு இந்தத் தடுப்பூசிகள் ஏன் போடவேண்டும்?

தாய்மார்களின் பிற்கால கருத்தரிப்பின்போது அல்லது கருத்தரித்துள்ள தாய்மார்கள் குழந்தைகளின் தொடர்பில் வரும்போது, அவர்களுக்குக் குழந்தைகளிடமிருந்து இந்த நோய் பரவாமல் இருப்பதற்காகவே அனைத்துக் குழந்தைகளுக்கும் ஆண், பெண் இருபாலாருக்கும் இந்தத் தடுப்பூசி போடுவது சிபாரிசு செய்யப்படுகிறது. சின்னம்மை மற்றும் புட்டாளம்மை போலவே ரூபெல்லாவும் மிக வேகமாகக் காற்றின்மூலம் பரவுகிறது. மற்றும் இது ஒரு மிகத் தீவிரமான தொற்றுநோய் ஆகும்.

இந்தத் தடுப்பூசி சமுதாயத்தில் தொற்றுநோய் பரவும் வாய்ப்பைக் குறைக்கின்றது.

# குழந்தைகளுக்கு உணவூட்டுதல்



குழந்தைகளுக்கு உணவூட்டுதல் ஒரு முக்கியமான விடயமாகும். குழந்தைப் பருவத்தில் உணவூட்டும்போது, அவ்வுணவு அவர்களது வளர்ச்சிக்குத் தேவையான அனைத்துப் போசணைப் பொருட்களையும் உள்ளடக்கியிருப்பது அத்தியவசியமாகும்.

உணவானது - பல்வேறுபட்ட வகையான உணவுக் கூறுகளைக்கொண்டிருப்பது அவசியமாகும்.

### சக்தி வழங்கும் உணவுகள்

இவை குழந்தைகள் விளையாடுவதற்கும் வேலைகளைச் சிறப்பாகச் செய்வதற்கும் உதவு கின்றன. அவையாவன -

அரிசி, கோதுமை, சோளம், எண்ணெய் வகை, சீனி, வாழைப்பழம்.

### உடலை காக்கும் உணவுகள்

இந்தவகை உணவுகள் அதிகளவில் விற்றமின்களையும், கனியுப்புக்களையும் உள்ளடக்கி இருக்கும். இந்தவகை உணவுகள் உடலைநோயிலிருந்து காப்பதுடன், உடற்செயற்பாடுகள் சீராக இடம்பெறவும் உதவுகின்றன. அவையாவன -

பழங்கள், மரக்கறிவகைகள்.

### உடல் கட்டுமானம் அல்லது வளர்ச்சிக்கு உதவும் உணவுவகைகள்

இவை பிரதானமாகப் புரத உணவுகளாகும். இவை உடலின் வளர்ச்சி, நோய் தொற்றுக்கு பின் உடல் அவையவங்களை மறு சீரமைத்தல் என்பவற்றில் பங்கேற்கின்றன. புரதத்தைக் கொண்ட உணவுகளாக. பால், முட்டை, மீன், இறைச்சி, சோயா, நிலக்கடலை.

### உணவூட்டும் நேரம்

குழந்தைகளுக்கு உணவூட்டும் நேரமானது - ஓய்வானதாகவும், மகிழ்ச்சிகரமானதாகவும், குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் பங்குபற்றக் கூடியதாகவும் இருப்பது சிறப்பானதாகும். குழந்தையை ஒருபோதும் அவசரமாக உணவுண்ணுமாறு தூண்டுவது நல்லதல்ல.

உணவூட்டும் நேரமானது, குழந்தையின் அபிவிருத்திக்கு உதவுவதாக இருக்கவேண்டும். உதாரணமாக -

குழந்தையானது புதியசொற்கள், உணவுகள், நிறங்கள் என்பவற்றை அறிய கூடியதாகவும் உணவின் சுவை, உணவூட்டும் பாத்திரங்களின் பெயர் பற்றி அறியகூடியதாகவும் இருத்தல்.

குழந்தைகளை உணவில் தொடவும், தாமே எடுத்து உண்ணவும் அனுமதிப்பதன் மூலம் குழந்தைகளின் ஒத்துழைப்பை அதிகரிக்கமுடியும்.

உற்சாக மூட்டுவதன் மூலமும், சிரிப்பூட்டுவதன் மூலமும் உணவுண்ணுதல் அவர்களுக்கு நல்லது என்பதை உணரச்செய்தல்.

(தொடரும்...)

**வி.ஜெயச்சந்திரன்**
**தகவல் தொடர்பு மையம், விவசாயபீடம்.**

# இந்த வார பலன்கள்

## 19.03.2004- 25.03.2004 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| சூ. புத | சுக். ராகு | செவ் | சனி |
| சூ. யுரே | 20 மா. 4.24 மீன-சந்<br>22 இ. 12.26 மே-சந்<br>25 ப 11-20 இட-சந் | | |
| நெப் | | | குரு |
| | | கேது | |

### மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்த அன்பர்களுக்கு இவ்வாரம் பொதுவாக நற்பலன் கிடைக்கும். சுபநிகழ்ச்சிகள், கொண்டாட்டங்கள் முதலியவற்றில் ஈடுபாடு கூடுதலாக இருக்கும். தொழில் முறையில் சிறப்பும், நல்வருவாயும் கிட்டும். புத்திரர்களால் நன்மைகளும் முன்னேற்றங்களும் கிடைக்கப் பெறும். கடன் தொல்லைகள் இருப்பின் படிப்படியாகத் தீரும். திருமணத்திகான முயற்சி கைகூடும். உத்தியோகத்தினர் தொழில் மூலம் பல நற்பலன்கள் காண்பார்கள். சிலருக்கு இடமாற்றங்கள் கிடைக்கலாம். வர்த்தகர்களுக்கு விற்பனை நன்றாக நடக்கும். வெளிநாட்டுப் பொருட்கள் விற்பனை செய்வோர் கூடிய லாபம் பெறுவர். மாணவர்களுக்கு முன்னேற்றத்திற்கான வசதிகள் கிடைக்கும்.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இடபராசியினர் அதிக நற்பலனை எதிர்பார்க்க முடியாது. குடும்பத்தில் சுபக்குறைவுகள் மாறி மாறி இருக்கும். வைத்திய செலவுகளும் அதிகமாகும். தொழில் முயற்சிகளும் நல்ல இலாபத்தைத் தாராது. குடும்பப் பெண்கள் சிக்கனமாக நடந்துகொள்வது நன்று. புத்திரர்களால் நன்மைகள் கிடையாது. திருமணப்பேச்சுக்கள் இழுபறியையும் தாமதத்தையும் காட்டிநிற்கும். புதிதாக தொழில் ஏதும் நினைப்பவர்களுக்கு நன்மையான அனுகூலம் கிடையாது. உத்தியோகத்தருக்கு பிரச்சினைகள் இடமாற்றங்கள் இடம்பெறலாம். வர்த்தகர்கள் வியாபாரத்தில் நற்பலனை எதிர்பார்க்க முடியாது. புதிய முதலீடுகள் செய்வதற்கு பணவசதி போதாமல் இருக்கும். மாணவர்களுக்கு முன்னேற்றம் கிடையாது. வெளிநாட்டு பலன் கடினம்.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



மிதுன ராசியினருக்கு தொழில் முறையில் பல பிரச்சினைகள் தோன்றும். வருவாய் மிகக்குறைவாக கிடைக்கும். குடும்பச்செலவுக்கு வருவாய் போதாமல் இருக்கும். குடும்ப வாழ்க்கை நிம்மதியாக இராது. அடிக்கடி சச்சரவுகள் காணப்படும். நோய் துன்பங்கள் தலைதூக்கும். கணவன் மனைவியிடையேயும் கருத்து வேற்றுமை காட்டும். திருமண முயற்சிகள் தடை தாமதத்தையே தரும். காதல் விவகாரங்கள் தோல்வியில் முடியும். உத்தியோத்துறையினர் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் பணியாற்றுதல் நன்மைதரும். வியாபாரிகளுக்கு மந்தமாகவே தொழில் நடக்கும். அலங்கார பொருட்கள் விற்பனை செய்வோர் இலாபம் காண்பர். மாணவர்களுக்கு முள்னேற்றம் குறைவு.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசியில் ஜனனமானவர்களுக்கு நற்பலன்கள் உண்டு தொழில் சிறப்பாக அமையும் பணவருவாய் தேவைக்கேற்ப கிடைக்கும். குடும்பத்தில் சுமுக நிலை காணும். வீட்டில் சுபகாரிய கொண்டாட்டங்கள் நடைபெறும். இனபந்துக்கள் நண்பர்கள் வருகை அதிகரிக்கும். எண்ணிய கருமங்கள் விரைவில் அனுகூலமாகும். தேகசுகம் குடும்ப சுகம் நன்றாக இருக்கும். விவாக முயற்சிகள் வெற்றியளிக்கும். உத்தியோகத்தர்கள் பணிகளை சிறப்பாக ஆற்றுவார்கள். உயரதிகாரிகளின் அனுசரணை உண்டு. சிலருக்கு புதிதாக தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கலாம். வியாபாரம் நல்லபடியாக இருக்கும். சக வியாபாரிகளுடன் நல்லிணக்கம் இருக்கும். மாணவர்கள் முன்னேற்றமடைவர். கல்வி சம்பந்தமாக தூரதேசம் செல்வார்கள்.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் பொதுவாக நன்று. தொழில் முயற்சிகள் நன்கு பலிதமாகும். வருவாய் குடும்ப நிலைக்கேற்ப அமையும். குடும்பத்தில் ஒற்றுமையும் புரிந்துணர்வும் ஏற்படும். இனத்தவர்களாலும் பிள்ளைகளாலும் நன்மை உண்டு. குடும்பத்தில் நன்மை உண்டாகும். தூரதேசத்திலிருந்து பண உதவிகள் கிடைக்க இடமுண்டு. விவாக சம்பந்தமான முயற்சிகள் முன்னெடுக்கப்படும். எடுத்த கருமங்கள் முன்னேற்றமாக அமையும். உத்தியோகத்தர்கள் தொழிலில் முன்னேற்றம் காண்பர். அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவர். வியாபார நடவடிக்கைகள் சிறப்பாக இயங்கும். முதலீடுகளை கூடிய விலைக்கு விற்று நல்ல லாபம் பெறுவர். மாணவர்கள் முன்னேற்றமுடையவர்களாக காணப்படுவர்.

### கன்னி

*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



கன்னி ராசியில் பிறந்தவர்களுக்கு தொழில் சிறப்பாக இருக்கும். பிரயாசைக்கேற்ற வருவாய் கிடைக்காமல் போகலாம். வீட்டில் குடும்ப அங்கத்தவர்களால் சுகமிருப்பினும் மனத்திருப்தி குறைவாகவே காணும். எடுத்த கருமங்கள் நினைத்தபடி நிறைவேறுவதில் அலட்சியப் பிரயாசை காணும். எடுத்த கருமங்கள் நினைத்தபடி நிறைவேறுவதில் அலைச்சல் பிரயாசை காட்டும். குடும்ப செலவுகள் வரவிலும் பார்க்க கூடுதலாகவே இருக்கும். கடன்பழுவும் ஏற்படலாம். திருமணப்பேச்சுக்கள் கைதவறிப்போகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு கூடுதலாக இருக்கும். வியாபரிகள் கடின உழைப்பும் குறைந்த ஊதியமும் பெறுவர். முயற்சி திருவினையாக்கும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம் தடைப்படும். ஊக்கம் எடுக்கவும்.

### துலாம்

*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*



துலாராசிகாரர்களுக்கு பல வகையான நற்பலன்கள் ஏற்பட இடமுண்டு. தொழில் அனுகூலங்கள் நன்றாக நடக்கும். தேவைக்கேற்ப வருவாய்கிட்டும். நினைத்த கருமங்கள் திருப்திகரமாக நிறைவு பெறும். வருவாய் இருப்பினும் குடும்பப் பெண்கள் தேவையறிந்து செலவிடவேண்டும். தேகசௌக்கியம் நன்றாக இருப்பினும் பேணிக்கொள்ளுதல் நன்று. திருமணம் சம்பந்தமான பேச்சுக்கள் நல்ல அனுகூலத்தைத் தரும். உத்தியோகத்தர்களுக்கு விருப்பத்திற்கேற்ப சில மாற்றங்கள் கிடைக்கலாம். தொழில் ரீதியில் வெளிநாடு செல்லும் வாய்ப்பு சிலருக்குக் கிடைக்கும். மாணவர்களுக்கு நல்ல முன்னேற்றமுண்டு. சிலருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கலாம்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிக ராசியினருக்கு தொழில் ரீதியில் அடிக்கடி தொல்லைகள் ஏற்படும். பணவருவாய் மத்திமமாகவே இருக்கும். இனபந்துக்களால் சில தொல்லைகள் வரஇடமுண்டு. நண்பர்கள் உதவி செய்வார்கள். கணவனுடைய வருவாயைக் கொண்டு குடும்பப் பெண்கள் திருப்தியடையமாட்டார்கள். கொடுக்கல் வாங்கல், பேச்சுக்கள் எல்லாமே அவதானமாக இருக்கவேண்டும். தேவையற்ற சிக்கல்களில் மாட்டிக்கொள்ள நேரிடும். எடுத்த கருமங்கள் தடங்கலாகவே இருக்கும். உத்தியோகத்தினர் அவதானமாகத் தமது பணிகளில் கவனம் செலுத்த வேண்டும். சகதொழிலாளர் பொறிவைக்க நினைப்பார்கள். வியாபாரத்தில் மிகுந்த அவதானந் தேவை. கடன்களை வசூலிப்பது மிகவும் சிரமம். மாணவர்களுக்கு முன்னேற்றம் குறைவாக இருந்தாலும், முயற்சிக்கேற்ப பலனுண்டு.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



தனுசு இராசியினருக்கு செய் தொழில் பல நன்மைகளைக் கொடுக்கும். பணவருவாயும் நல்லமுறையில் கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை, புரிந்துணர்வு தென்படும். புத்திரர்கள், சகோதரர்கள் இவர்களின் உதவியுண்டு. தேகசுகம், குடும்ப சுகம் பாதிப்படையாது. குடும்பப்பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள். புதிதாக வேலைதேடும் இளைஞர், யுவதிகளுக்கு நல்ல வாய்ப்புகள் கிடைக்கலாம். திருமணப்பேச்சுக்களும் நல்ல முடிவைத்தரும். மகிழ்ச்சியான வாழ்க்கை மிளிரும். வியாபாரிகளுக்கு பல உதவிகள் கிடைக்கும். வியாபாரம் சிறப்பாக நடைபெறும் புதிய முதலீடுகளுக்கு நன்று. மாணவர் கல்வியில் சிறப்புத் தேர்ச்சி பெறுவார்கள்.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகர இராசியில் பிறந்தவர்களுக்கு தொழில் முன்னேற்றம் மந்தமாக இருக்கும். பணவருவாய் இருந்தாலும், செலவுக்குப் போதாது. குடும்பத்திலும் பல இன்னல்கள் தலைதூக்கும். கருமங்களை ஆற்றுவதில் சிரமங்களும் அலைச்சலும் ஏற்படும். தேகசௌக்கியம் குன்றுவதால் வைத்திய செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்தில் ஒற்றுமைக் குறைவும், வாக்குவாதமும் ஏற்படுவதால் மனநிம்மதி குன்றும். இளைஞர்கள் ஆடம்பர வாழ்வில் ஈடுபடுவர். திருமணப் பேச்சுக்கள் காலந்தள்ளிப்போகும். எந்தக்கருமத்தையும் நன்கு சிந்தித்து செயற்படவேண்டும். உத்தியோகத்தர்கள் உயரதிகாரிகளின் கெடுபிடிகளுக்கு ஆளாகவேண்டிவரும். பொறுமையுடன் செயற்படவேண்டும். வியாபாரிகளுக்கு புதுவித சக்கல் தோன்றும். பலவித சிக்கல்களை சமாளிக்க வேண்டி இருக்கும். பணவரவு குன்றும். மாணவர்கள் மந்தநிலையிலேயே காணப்படுவர். விளையாட்டுக்களில் ஊக்கம் காட்டுவர்.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*



கும்பராசியினருக்கு குரு நோக்குவதால் இவர்கள் பல நன்மைகளை காண்பர். செய்தொழில் நல் இலாபத்தை தரும். இனசனக் கொண்டாட்டங்கள் நற்காரிய சிந்தனைகள் அதிகரித்துக் காணப்படும். பணவசதிகள் பெருகும். அயலவர்களுடன் இணக்கம் காணலாம் குடும்பத்தில் ஒற்று மையும் மகிழ்ச்சியும் தென்படும். தேகாரோக்கியம், குடும்ப சுகம் பாதிப்படையாது. குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியில் திளைப்பர். இல்வாழ்க்கையில் இணையவிரும்புவோருக்கு காலம் கனிந்துவரும். வாழ்க்கை சிறப்படையும் உத்தியோகத்திலுள்ளோர் கௌரவிப்பு, பதவியுயர்வு, சம்பள உயர்வு என, பலராலும் கௌரவிக்கப்படுவர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்படையும். பழைய முதலீடுகள் எளிதில் விற்பனையாகி நல்ல பணம்சேரும். விஸ்தரிப்புகளுக்கும் நன்று. மாணவர்களுக்கு முன் னேற்றங்கள் கிடைக்க வாய்ப்புண்டு. உயர்கல்வி கிட்டும்.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



மீனராசியில் பிறந்தவர்களுக்கு தொழில் முன்னேற்றம் சிறப்பாகத் தென்படவில்லை. பணவருவாய் திருப்திகரமாக இராது. குடும்பத்தில் ஒற்றுமைக்குறைவு, சச்சரவுகள் தோன்ற இடமுண்டு. எடுக்கும் கருமங்கள் இழுபறிநிலையிலேயே இருக்கும். உறவினர்களால் ஆறுதலும் உதவியும் காணும். குடும்பப்பெண்கள் வரவிற்கேற்ப செலவுகளைச் செய்யவேண்டும். மருத்துவச் செலவுகளும் தலைதூக்கவே செய்யும். மங்கள நிகழ்வுகளும் இழுபறியும், தாமதமும் காட்டும். வெளிநாட்டுப்பிரயாணம் மேற்கொள்வோர் ஏமாற்றமடையக் கூடும். உத்தியோகத்தினர் ஊக்கத்துடன் பணியாற்றினாலும், அதிகாரிகளை திருப்திப்படுத்த முடியாமல் இருக்கும். பொறுமையுடன் பணியாற்றுதல் நன்று. வியாபாரம் மிக மந்த நிலையிலேயே இருக்கும். வங்கி உதவிகள் கிடையாது. புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். மாணவர்களுக்கு முன்னேற்றம் மத்திமமாகவே இருக்கும். கூடிய முயற்சிதேவை.

## புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் பகுதி XXX - சிவா சின்னப்பொடி

# தோடுடைய செவியர்களால் வந்த வினை

அதாவது ஒரு வருடத்திற்கு இவ்வளவு பணம், இரண்டு வருடத்திற்கு இவ்வளவு பணம் என்று பேரம் பேசி சட்டப்படி திருமணம் செய்வதாகும். அவர்கள் எதிர்பார்த்தது நிரந்தர வதிவிட அனுமதி அல்லது, பிரெஞ்சுக் குடியுரிமை கிடைத்ததும், ஏற்கனவே செய்த ஒப்பந்தத்தின்படி சட்டரீதியாகப் பிரிந்துசென்று விடுவார்கள். வதிவிட அனுமதி அல்லது குடியுரிமை



பெறுவதற்கு நாட்சென்றால், இந்தத் திருமண ஒப்பந்தம் மேலும் ஒரு வருடத்திற்கு நீடிக்கப்படும்.

இவ்வாறு, திருமணம் செய்த சிலர் ஒப்பந்த காலம் முடியுமட்டும் சேர்ந்து வாழ்வார்கள். சிலர் ஒரு மாதம், இரண்டு மாதம் சேர்ந்து வாழ்ந்துவிட்டுப் பிரிந்துவிடுவார்கள். ஆனால், ஒப்பந்தகாலம் முடியும்வரை, மணவிலக்கு பெறுவதில்லை.

தொடக்க காலத்தில் இந்தத் திருமண முறையை பிரெஞ்சு அரசாங்கம் அவ்வளவாகக் கண்டுகொள்ளவில்லை. வழமையான நடைமுறைகளின்படி, இவ்வாறு திருமணம் செய்பவர்களையும் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் ஏற்றுக்கொண்டுவந்தது.

ஆனால், இந்த ஒப்பந்தத்திருமணம் விசா அல்லது குடியுரிமையை நோக்கமாகக் கொண்டது என்பதை உணர்ந்ததும், விசா வழங்குவதற்கான நடைமுறைகளை இறுக்கத் தொடங்கியது. இவ்வாறு திருமணம்செய்யும் வெளிநாட்டவருக்கு முதலில் குறுகியகால விசாவை வழங்கும் நடைமுறையைக் கொண்டுவந்தது. குடியுரிமை வழங்கும்போது, கணவன் - மனைவி இருவரும் சேர்ந்து வாழ்ந்தது, குழந்தை பெற்றுக்கொண்டது முதலான பல விடயங்களை அவதானித்தது.

நமது இளைஞர்களும் - விசாவுக்காக இபபடி பிரெஞ்சுப் பெண்களை அல்லது பிரெஞ்சுக்குடியுரிமை பெற்ற வேற்றினப் பெண்களைத் திருமணம் செய்தாலும், அவர்களுடன் தொடர்ந்து குடும்பம் நடத்த அவர்கள் தயாராக இருக்கவில்லை.

நிரந்தரமாக குடும்பம் நடத்துவதற்கு அவர்களுக்கு நமது தாயக தமிழ்ப் பெண்களே தேவைப்பட்டார்கள். இவர்களின் ஒப்பந்தத் திருமண முறையை அறியாத பல பெண்கள் தாயகத்திலிருந்து அங்குசென்று தாங்கள் கணவன் என்று நம்பிச்சென்ற நபரின் இரட்டை வாழ்க்கையையும், போலித்தனத்தையும் கண்டு மனம் உடைந்து தற்கொலையும் செய்திருக்கிறார்கள்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில், பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த மல்லிகா (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்ற பெண்ணுக்கு 1994 ஆம் ஆண்டு கொழும்பில் பிரமாண்டமான முறையில் திருமணம் நடந்தது.

மாப்பிள்ளை பிரான்ஸ் நாட்டு குடியுரிமை பெற்ற டிக்சன் என்பவர். அவரது சொந்த இடம் மானிப்பாய் என்று அறிய முடிந்தது. மூன்று மாதம் கொழும்பில் தங்கியிருந்து பணத்தை தண்ணியாக வாரி இறைத்து - தனது மனைவியையும் - அவரது குடும்பத்தினரையும் பிரமிக்க வைத்த அந்த நபர் - 1994 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மனைவியையும் அழைத்துக்கொண்டு பாரிசுக்கு சென்றார். (குடியுரிமை பெற்றவர்கள் அந்தக் காலத் தில் 2 அல்லது 3 மாதத்தில் தமது மனைவியை அங்கே அழைத்துச் செல்லக் கூடிய வாய்ப்பு இருந்தது.)

தன்னுடைய கணவன் பெரும் பணக்காரன் பாரிசீல் பெரிய தொழில் அதிபர் என்ற நினைப்புடன் பாரிஸ் நகரத்துக்குச் சென்ற மல்லிகாவுக்கு, கணவனின் ஆடம்பரமான புத்தம் புதிய 'BMW' ரக காரும், சிறு தோட்டத்துடன் கூடிய அழகான சொந்த வீடும், அழகை நிறைத்தது விலையுயர்ந்த ஆடம்பரப் பொருட்களும் என்று, எல்லாவற்றையுமே பார்க்கப் பார்க்க பெருமையாக இருந்தது.

ஆனால், கணவனின் நண்பர்கள் என்று சொல்லிக்கொண்டு கழுத்திலே நாய்ச் சங்கிலியை விட மொத்தமான சங்கிலி - கையிலே முறுக்குக் காப்பு - இடுப்புக்குக் கீழே கழன்று விடுமளவுக்கு இறங்கிப் போன தொள தொள ரவுசர் - தொள தொள ரீசேட் சகிதமாக வரும் தோடுடைய செவியர்களைப் பார்க்க அவளுக்கு பயமாகவும், அதேநேரம் அருவருப்பாகவும் இருந்தது.

நேரகாலம் இல்லாமல் நடுச்சாமத்தில் எல்லாம் வீட்டுக்கு வருவதும் கேட்டுக் கேள்வி இல்லாமல் வீட்டுக்குள் எல்லா இடமும் சுதந்திரமாக திரிவதும், அதுவும் அடிக்கடி மதுபோதையில் வருவதும், அவளுக்கு அவர்கள் மீது தீராத வெறுப்பை தோற்றுவித்திருந்தது.

கணவனிடம் அன்பாக அவர்களை வீட்டுக்கு வரவேண்டாம் என்று, சொல்லும்படி சொல்லிப் பார்த்தாள். ஆனால் அவன் அவர்கள் தனது பிஸ்னஸ் பாட்னர்கள் என்றும் அதனால், அவர்கள் வீட்டுக்கு வருவதை தடுக்கக் கூடாது என்றும், அவர்கள் வரும்போது அவர்களுக்கு வேண்டியதை செய்து கொடுக்க வேண்டும் என்றும், உத்தரவு போட்டிருந்தான்.

இதனால், கணவன் - மனைவிக்கிடையே அடிக்கடி சண்டைவர ஆரம்பித்தது.

பாரிசுக்கு சென்ற 2 மாதகாலத்திலேயே தனது கணவன் ஏதோ சட்டவிரோதமான வேலை செய்வதையும் - அவனது நண்பர்கள் எல்லாம் மோசமான நடத்தை உடையவர்கள் என்பதையும் புரிந்துகொண்டாள்.

ஆட்கடத்தல் - அடிதடி, சண்டை, கொலை, கொள்ளை எல்லாம் தனது கணவனுக்கும் அவளது நண்பர்களுக்கும் அத்துப்படியானது என்பதைத் தெரிந்து கொண்டபோது - ஒரு பெரிய ஆபத்தில் வந்து மாட்டுப்பட்டு விட்டதைப் போன்ற உணர்வு அவளுக்கு ஏற்பட்டது. தனது கணவனுக்குக்கிட்ட நெருங்குவதற்கே அவள் பயந்தாள். இதனால், குடும்பத்துக்குள் இன்னும் சண்டை அதிகமாகியது.

அதன் பிறகு, அவளது கணவன் அவளை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை ஒரு அடிமையைப் போலவே நடத்தினான். அதுவரை வெளியில் நடந்த 'தண்ணிப் பாட்டி' அடிக்கடி வீட்டுக்குள் நடக்க ஆரம்பித்தது.

1994 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி இரவு வீட்டில் ஒரு பெரிய புத்தாண்டுப் பாட்டி நடந்தது. அதற்கு சில வெள்ளை இனப் பெண்களும் வந்திருந்தனர்.

(தொடரும்)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்*
*கோல்நோக்கி வாழும் குடி.*

திருக்குறள்

# நமது நோக்கு

## ஓயும் பிரதேசவாத அலையும் ஓயாத தமிழ்த் தேசிய அலைகளும்...

மட்டு - அம்பாறை மாவட்டங்களில் கருணாவின் துரோகத்தனமான நடவடிக்கைகள் காரணமாக ஏற்பட்டுள்ள குழப்பம் மற்றும் பதற்றநிலை மெல்லமெல்ல தணிந்து வருகின்ற அதேவேளை, அவரது அண்மைக்கால நடவடிக்கைகள் தொடர்பாக வெளிவந்து கொண்டிருக்கின்ற செய்திகள் அவர் மீதான தென்தமிழீழ மக்களின் மதிப்பும், மரியாதையும் அழிந்து வருவதும் உண்மையேயாகும்.

பிரதேசவாதத்தை முன்வைத்து மட்டு - அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த மக்களிடையே தன்னையோர் பெரும் தலைவனாக இனம்காட்ட அவர் மேற்கொண்ட முயற்சிகள் பலவும் முதலில் ஓர் பரபரப்பை ஏற்படுத்தினாலும் இப்போது பிசுபிசுத்துப்போகத் தொடங்கியுள்ளது.

தன்னை மட்டு - அம்பாறை மக்களின் ரட்சகனாக எண்ண வைப்பதன் மூலம், தான் இத்தனை காலமும் செய்த வரலாற்றுத் தவறுகளை அவர் மறைக்க முனைகிறார் என்ற விடயம் அச்சம் மற்றும் அழுத்தம் காரணமாக அவரைச் சுற்றி அவருக்கு 'ஜே..!' போட்டுக்கொண்டிருந்த போராளிகள் மத்தியில் வெளிப்படத் தொடங்கியதும் அவர்கள் தருணம் பார்த்து அவரைவிட்டு தப்பியோடத் தொடங்கியுள்ளதுதான் இராணுவத்தினதும், அரசினதும் குறிப்பாக சந்திரிகாவின் கூட்டணியினரதும் உதவிக்காகவும் இதுவரைகாலமும் அவர்களுக்கு எதிராக இயங்கிய - அவர்களால் தேசவிரோதக் குழுக்கள் என்று வர்ணிக்கப்பட்ட - அமைப்புகளினதும் தொடர்புக்காகவும் கருணா, கையேந்தத் தொடங்கியதையடுத்து கடும் வெறுப்பும், ஆத்திரமும் அடையத் தொடங்கியுள்ளனர்.

தேசியத் தலைவர்மீது நம்பிக்கை கொண்ட போராளிகளும் பொதுமக்களும் கருணாவின் செயற்பாடுகளால் அதிர்ச்சியும், அவமானமும் கொண்டுள்ளனர்.

தாங்கள் நம்பிக்கையும், விசுவாசமும், மதிப்பும் வைத்திருந்த கருணாவுக்கு இப்படி ஒரு மோசமான துரோகத்தனமான பக்கமும் இருக்குமென்பது அவர்கள் கனவிலும் எதிர்பார்க்காத ஒன்றேயாகும்.

அதுவும் பொதுத்தேர்தல் ஒன்றில் முதன்முறையாக தமிழ் மக்கள் தம் தேசியத் தனித்துவத்தை இனங்காட்டி அதன் ஒருமித்த பலத்தை சிங்களப் பேரினவாதத்திற்கும் சர்வதேச சமூகத்திற்கும் வலுவாக உறுதிப்படுத்தித் தெரிவிக்க விடுதலைப் புலிகளின் அங்கீகாரத்துடனும், ஆதரவுடனும் தமது வாக்குகளை அளிக்கத் தயாராகிவரும் வேளையில், அதனைச் சிதைக்கும் போக்கிலான நாசகார நடவடிக்கையை கருணா எடுத்ததுடன் மட்டு - அம்பாறை பகுதிகளில் தேர்தலில் வெற்றி பெறும் உறுப்பினர்கள் அனைவரும் தென்பகுதியில் வெற்றி பெற்று ஆட்சியமைக்கும் அரசுடன் சேர்ந்து இயங்கவேண்டுமென கருணா குழுவினர் அறிவுறுத்தி அறிக்கை விட்டுள்ளமையானது அப்பகுதி மக்களுக்கு அதிர்ச்சியையும், ஆத்திரத்தையும் அளித்துள்ளது என்பது அங்கிருந்துவரும் செய்திகள் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது.

இது கருணா தனிமைப்படுத்தப்பட்டுவருவதையும், பொது மக்கள் அவரிடமிருந்து அன்னியப்படுத்தப்பட்டு வருவதையும் உணர்த்துவதாகவும் இருக்கிறது.

இதேசமயம், கருணாவின் நடவடிக்கையால் குதூகலமடைந்து, அவர் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்த செய்தி பூதாகரமாக்கி பிரசாரப் புலம்பலை செய்து வந்த தமிழ் தேசியத்திற்கு எதிரான ஊடகங்கள் தாம் எதிர்பார்த்த தாக்கம் ஒரு பேரலையாக உருக்கொள்ளாது ஒரு சிறு நீர்க்குமிழி போல ஜாலம் காட்டி மறைந்துவருவது கண்டு சலிப்படைந்துள்ளதாக தென்பகுதி அரசியல் ஆய்வாளர் ஒருவர் தெரிவித்தார்.

பொதுவாகவே கருணாவின் நடவடிக்கையை ஒரு தனிமனிதனின் பொறுப்பற்ற சுயநலத்துடன் கூடியதாக நடவடிக்கையாக ஏற்கனவே, புறந்தள்ளி அதற்கு பெருமளவில் தாக்கத்தை உணர்த்தும் பிரதிபலிப்பினை காட்டாத விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் கருணா உருவாக்கியுள்ள பதற்ற நிலைமை ஒரு பாரிய இராணுவ மற்றும் அரசியல் நெருக்கடியாகப் புலிகளுக்கு இல்லையென்றும், தற்போதைய தமிழர்களின் தேசியப் பிரச்சினையில் இது எந்தவிதமான பாரிய பாதிப்பையும் ஏற்படுத்தாது என்றும் 'தமிழ் கார்டியன்' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளமையானது. தென்பகுதி ஊடகங்களின் பிரசாரப் பொய்மையை உலகிற்கு உணர்த்தியுள்ளது.

தீர்க்கதரிசன உணர்வுகொண்ட கவிஞர் காசி ஆனந்தன் கிழக்கின் நிலைகுறித்து வெளியிட்டுள்ள அழுத்தமான அறிக்கையொன்றில், முதன்முதலாகப் பிரதேசவாதம் பேசிய வி.நல்லையா, கே.டபிள்யூ.தேவநாயகம், இராஜன் செல்வநாயகம், செ.இராசதுரை போன்றவர்கள் கடைசியில் எப்படி பேரினவாத ஆட்சியாளர்களின் கைப்பொம்மையாகி அமைச்சர் பதவிக் கதிரைகளில் முடங்கிப்போய் துரோகிகளாயினர் என்பதை விளக்கியுள்ளதன் மூலம் கருணாவுக்கான தற்போதைய நிலையை தெளிவாக இனம்காட்டியுள்ளார்.

துரோகிகள் வரிசையில் அவருக்கான இடம் ஒதுக்கப்பட்டுவிட்டது என்பதை சுட்டிக்காட்டிய கவிஞர் பிரதேசவாதம் எரிந்து சாம்பராகி நெடுங்காலம் ஆகிவிட்டது என்றும் தமிழர் தாயகத்தை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு எனக் கூறுவதையோ, தமிழ்க் கொள்கையை கைவிடுவதையோ, தமிழ் மக்கள் கடைசி மூச்சுவரை எதிர்ப்பர் என்று உறுதிபடக் கூறியிருப்பதை மக்களின் குரலாகவே கொள்ளமுடியும்.

இது தமிழ் தேசியம் பொய் பிரசாரங்களால் பலவீனப்பட்டுவிடாது, பிரதேசவாதத்தால் சிதைந்து போகாது என்பதையும் உணர்த்துவதாகவுள்ளது.

# நாடும் நடப்பும்

செய்தி: இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேச மக்களின் சுதந்திரமான வாக்களிப்பு படைத்தலைமைகள் பலத்த எதிர்ப்பு



## 2003 - 2004 கல்வியாண்டின்

# மேலதிக விசேட அனுமதியால் கலைப்பீட மாணவர்கள் பாதிப்பு

## யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

2003/2004 கல்வியாண்டுக்கான - பல்கலைக்கழக கலைப்பீடத்திற்கான விசேட அனுமதியில், யாழ்ப்பாண மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட மாணவர்கள் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்படுவதாவது -

கடந்த இரண்டு ஆண்டுகளாக யாழ்.பல்கலைக்கழக விசேட கற்கை நெறிக்காக - 125 இற்கும் மேற்பட்டோர் தெரிவாகினர். ஆனால், 2003 ஆம் ஆண்டு விசேட அனுமதிக்கு 45 மாணவர்கள் மட்டுமே தெரிவாகியுள்ளனர். மிகுதி 90 மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த முறை பல்கலைக்கழக கலைப்பீடத்திற்குரிய சாதாரண அனுமதிக்குரிய தகுதியாக - A,2B பேறுபேறுகளைப் பெற்றும், பல்கலைக்கழக அனுமதியை இழந்துள்ளனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு திறமை அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படவேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் - பாதிக்கப்பட்ட மாணவர்கள் அனைவரும் கலந்துகொண்டு, யாழ்.மாவட்ட மனித உரிமை ஆணைக்குழு அதிகாரியின் முன் - தாம் விசேட அனுமதியால் பாதிக்கப்பட்டமை தொடர்பாக எடுத்துக் கூறினர்.

# ஆசிரியர் பதவியுயர்வுகள் ஒரு ஏமாற்று வித்தையாகும்

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

ஆசிரியர் பதவியுயர்வு தொடர்பாக கல்வி அமைச்சினால் அண்மையில் வெளியிடப்பட்ட - 2004 ஆம் ஆண்டு சுற்றுநிருபம் பதவி உயர்வுக்காக, ஏங்கித் தவித்த ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்களின் எதிர்பார்ப்புக்களைத் தவிடு பொடியாக்கியுள்ளது என - இலங்கை ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது-

2004 ஆம் ஆண்டு சுற்றுநிருபத்தின்படி, 10 ஆயிரம் ஆசிரியர்கள் மட்டுமே, பயன்பெறுகின்றனர் எனினும், அவர்களின் மீதிச் சம்பளத்தின் ஒரு பகுதி பறிக்கப்பட்டுள்ளது.

அது ஆசிரியர் பதவி உயர்வுகள் ஒரு ஏமாற்று வித்தை. இந்த ஆண்டில் வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தில் பின்வரும் ஆசிரியர்களுக்குரிய பதவி உயர்வு பற்றிக் குறிப்பிடவில்லை.

தரம் 2-1 இல் இருந்து, பதவி உயர்வுக்காக ஏங்கும் 20 ஆயிரம் ஆசிரியர்கள் தொடர்பாகவும், இலங்கை ஆசிரியர் சேவை உள்வாங்கல்களில் பயிற்சிக்காலம் புறக்கணிக்கப்பட்டுள்ள 60 ஆயிரம் பயிலுநர்களாகச் சேவையில் சேர்ந்த ஆசிரியர்கள் தொடர்பாகவும், ஆசிரியர்சேவை அமுலாக்கத்திற்கு முன், சிறப்புப்பட்டதாரிகள் சம்பளத்திற்கு சமமான பட்டப்பின்படிப்பை முடித்த - விஞ்ஞான, கணித, ஆங்கில, விவசாயப் பட்டதாரிகள் தொடர்பாகவும், துரித டிப்ளோமா பெற்ற பட்டதாரிகள் தொடர்பாகவும், ஆசிரியர் பயிற்சி /கல்வி டிப்ளோமா பெறாத காரணம் கூறப்பட்டு பதவி உயர்வுகள் மறுக்கப்பட்டுள்ளன.

1994 ஆம் ஆண்டுக்கு முன்னர் வினைத்திறன் தடை தாண்டலின் சித்தி பெற்றவர்கள் தொடர்பாகவும், சுற்று நிருபத்தில் குறிப்பிடப்படவில்லை எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

# ஹெல உறுமய வேட்பாளர்களை லஞ்சம் கொடுத்து விலக்க முயற்சி

ஜாதிக ஹெல உறுமயவின் தேர்தல் வேட்பாளர்களை போட்டியிலிருந்து விலகுமாறுகோரி, பெருமளவு பணம் கொடுக்க முயற்சிக்கப்பட்டதாக - ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய அவர் - தமது அமைப்புக்கு மொத்தமாக 5 கோடி ரூபா லஞ்சம்கொடுக்க முயற்சித்ததாகக் கூறினார்.

இதில், ஒரு வேட்பாளருக்கு 5 இலட்சம் ரூபா ஒதுக்கியதாகவும், சில தரப்புகள் இதற்கு இணங்கியுள்ளன எனினும், தாம் ஒருபோதும்அரசியலில் இருந்து விலகப்போவதில்லை எனவும், அவர் குறிப்பிட்டார். தம்மில் பலருக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அம்பாறையில்

# முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆதரவாளர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - அம்பாறைப் பகுதிகளில் இடம்பெற்ற இரு வேறு சம்பவங்களில், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆதரவாளர் ஒருவர் கொல்லப்பட்டதுடன், ஒன்பது பேர் காயமடைந்தனர்.

சம்மாந்துறை ஒட்டமாவடிப்பகுதியிலுள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் பணிபுரிந்துவந்த சனா (வயது 45) என்பவர் - இனந்தெரியாதோரால் கடத்திச்செல்லப்பட்டு, அடித்துக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவரது உடல் நேற்றுக்காலை சம்மாந்துறையின் 12 ஆம் பிரிவிலுள்ள பற்றைக்குள்ளிருந்து மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மட்டக்களப்பின் காவந்தன் மூலையில் நேற்றுமுன்தினம் மாலை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவாளர்கள் மீது சிலர் நடாத்திய தாக்குதலில், அந்தக் கட்சியின் ஆதரவாளர்கள் ஒன்பது பேர் காயமடைந்த நிலையில், வாழைச்சேனை மற்றும் மாஞ்சோலை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் துப்பாக்கி வைத்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தாக்குதல் சம்பவத்தைப் படையினரே மேற்கொண்டதாகவும், இந்த இரு சம்பவங்களின் பின்னணியிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஈடுபட்டிருப்பதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (07)

# மாறிவரும் சிந்தனை, உலக ஒழுங்குக்கு ஏற்ப எமது விடுதலைப் போராட்டமும் வளர்ச்சியடைகிறது

## கூட்டமைப்பு வேட்பாளர் சூ.சிறில்



இன்று மக்களின் ஜனநாயக உரிமை தொடர்பான சிந்தனைகள், உலக ஒழுங்குகள் என்பன மாற்ற மடைந்துவருகின்றன. இம்மாற்றத்திற்கு இசைவாக எமது விடுதலைப் போராட்டமும் காலத்தேவைக்கேற்ப மாற்றமான நடைமுறைகளுக்கூடாக வளர்ச்சியை நோக்கி வீறுநடை போடுகிறது என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் சிறில் தெரிவித்தார்.

தேர்தலுக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரசாரக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அத்தியடி பிள்ளையார் கோவில் முன்றலில், தேசிய எழுச்சிப் பேரவை யாழ். பிரதேச செயலாளர் சிவஞானசேகரம் தலைமையில் இடம்பெற்றது.

அவர் அங்கு உரையாற்றுகையில் -

பூகோள ரீதியாக இலங்கை ஒரு தீவு. வரலாற்று ரீதியாக இந்தத் தீவு இருநாடு. வடக்கு - கிழக்கு இணைந்த தமிழ்த் தாயகபூமி. வரலாற்று ரீதியில் தனியரசாகவே இருந்தது. அங்கு வாழ்ந்து வந்த தமிழராகிய நாம் சுய உரிமையுடன், சுய கௌரவத்துடன் வாழ தர்மயுத்தம் செய்கிறோம். இது காலத்தின் கட்டளை.

தமிழர் விடுதலைப் போராட்டம் முக்கிய காலகட்டத்திலுள்ளது. எமக்கு வல்லமை உண்டு. தமிழர் பலம் தலைவர் பலம். தலைவர் சிந்தனை தமிழரின் சுயாட்சி. எமது தலைவரை ஏமாற்றமுடியாது.

ஜே.வி.பி. போன்ற இனவாதக் கும்பல்களுக்கு இந்தத் தேர்தல் மூலம தமிழராகிய நாம் நல்ல பாடம் புகட்டவேண்டும்.

இன்று மாறிவரும் சிந்தனைகள், உலக ஒழுங்கமைப்புக்கு ஏற்ப எமது விடுதலையும் மாறவேண்டும். மாற்ற மடைகின்றது. இந்தமுறை எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் -

. ஐ.நா.சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மக்களின் தன்னாட்சி உரிமை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழர் தேசத்தின் தன்னாட்சி உரிமை பற்றிப் பேசப்பட்டுள்ளது. தமிழீழ தன்னாட்சி என்பது இந்தமுறை 100 இற்கு 99 வீதமானவர்கள் வாக்களித்து ஓர் ஆணையை வெளிட்படுத்த வேண்டும். சர்வதேசத்திற்கு தரவுகளே தேவை. எனவே, உலகத்தின் பார்வையில் எமது தேவையை நாம் உணர்ந்து வாக்களித்து கூட்டமைப்பை வெற்றிபெறச்செய்வோம் எனக் கூறினார். (205)

# தமிழர்களைப் பிரிக்கும் முயற்சியில் தென்னிலங்கை ஊடகங்கள்!

## கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)



தமிழர்கள் தற்போது பிரிந்து வடக்கு - கிழக்கு என வேறுவேறாக இருக்கின்றார்கள் என்று தென்னிலங்கையில் பொய்ப்பிரசாரங்கள் நடைபெற்றுவருகின்றன என தமிழ்க் கூட்டமைப்பின் வேட்பாளர் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அண்மையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு ஆகிய பகுதிகளை தனியாக்கி தமிழர்களை பிரித்துவிடும் முயற்சிகளை தென்னிலங்கை ஊடகங்கள் மேற்கொள்கின்றன.

தமிழர் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரிக்கும்போது கருணா எம்முடன் இருந்தார். அப்போது இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பில் எந்தவிதமான எதிர்ப்பும் தெரிவிக்கப்படவில்லை.

தமிழர்களின் தாயகம் வடக்கு-கிழக்கு பகுதி என்பதில் தமிழ்க் கூட்டமைப்பு உறுதியாக உள்ளது.

கிழக்கு மாகாணத்திலும் தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர்கள் இந்த விடயத்தில் இன்னமும் உறுதியாகவே உள்ளார்கள்.

கிழக்கில் வாழ்கின்ற மக்களும் இந்த விடயத்தில் ஒரே நிலைப்பாட்டையே கொண்டுள்ளார்கள்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழரின் ஒற்றுமையைப் வெளிக்காட்ட ஏப்ரல் 2 இனைப் பயன்படுத்துவோம்!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசியப்பட்டியல் வேட்பாளர் குமாரவேல்



தமிழினம் மீது திணிக்கப்பட்டுள்ள பொதுத்தேர்தலைப் பயன்படுத்தி, தமிழினம் ஒரு தலைமையின் கீழ் இணைந்துள்ளது என்பதை உலகிற்கு எடுத்துக் காட்ட வேண்டும்.

இவ்வாறு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்ற யாழ்.கோட்ட ஆசிரியர்கள், அதிபர்களுக்கான கூட்டத்தின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் வேட்பாளர் குமாரவேல் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய அவர் - தமிழ் மக்களின் ஆத்மாவைத் தட்டி எழுப்பி, உணர்வு அலைகளினை முன்வைத்த 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பின் இத்தேர்தல் முக்கியம் பெறுகின்றது என்பதை எடுத்துக் கூறியதுடன், இத்தேர்தலில் பின்வரும் 5 முக்கிய விடயங்களை உலகிற்கு எடுத்துக் காட்ட 2004 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலை பயன்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார்.

அவையாவன:-

தமிழ்த் தேசம் ஒன்றிணைந்துள்ளது என்பதைக் காட்டவும்,

தமிழ் இனம் தன்னாட்சி உரிமையைப் பெற்றிடவும்,

ஒரு தலைமையின் கீழ் தமிழ் இனம் இணைந்துள்ளதைக் காப் .வும்,

தமிழ் மக்களின் அபிலாசைக்கு குறுங்காலத்தில் தீர்வு கிடைத்திடவும்,

சர்வதேச எதிர்பார்ப்புகளுக்குத் தமிழ்ச்சமூகம் ஆணையினை வழங்கிடவும்,

தமிழ் மக்களின் எதிர்காலம் இத்தேர்தலில் வழங்கும் தீர்விலேயே தங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கோட்ட கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ்.தங்கராசா தலைமையில் நடைபெற்ற சமகால அரசியல் நிகழ்வு பற்றிய கலந்துரையாடலில் யாழ்.கோட்டத்தினைச் சேர்ந்த 1000 இற்கும் மேற்பட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (58)

# தமிழர் விடுதலை போராட்ட வரலாற்றில் வர்த்தகர்களின் பங்கு அளப்பரியது!

## யாழ்.நல்லூர் கோட்ட பொறுப்பாளர் ஈஸ்வரன்

தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டமானது முக்கியமான காலகட்டத்தில் இன்று உள்ளது. இந்த நெடிய போராட்ட வரலாற்றில் வர்த்தக சமூகத்தவர்களின் பங்கு அளவிடமுடியாதவொன்றென, யாழ்.நல்லூர் கோட்ட பொறுப்பாளர் ஈஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு திருநெல்வேலி வர்த்தகர்களுடனான விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

திருநெல்வேலி வர்த்தக சங்க தலைவர் பஞ்சலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில்- தேர்தல தொடர்பான விளக்கங்கள் மற்றும் நடைமுறைகள் பற்றியும் வர்த்தகர்களால் தீமானங்கள் எடுக்கப்பட்டன.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய ஈஸ்வரன் - வரி என்பது இறைமை உள்ள அனைத்து நாடுகளிலும் உண்டு. தமிழீழத்தில் வரிவிதிப்பின்மூலம் கிடைக்கும் நிதியானது மீண்டும் மருத்துவசேவை, கல்விச்சேவை, அநாதரவானவர்கள் பராமரிப்பு சேவை என மக்கள் சேவையின் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றது என கூறினார்.

வர்த்தகர்களிடம் தேர்தல் அபிப்பிராயங்கள் கேட்கப்பட்டதுடன், வர்த்தகர்களால் சில தீர்மானங்கள எடுக்கப்பட்டன.

அவையாவன -

தேர்தலில் முழுமையாக வாக்களிப்பது.

வர்த்தக சமூகத்தவர்கள் அனைவரையும் வாக்களிக்கச் செய்வது.

நேரத்துடன் வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று வாக்களிப்பை மேற்கொள்ளல்.

வர்த்தகர்களின் பங்களிப்புடன் மக்களைப் பூரணமாக வாக்களிக்கச் செய்தல்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சின்னமான வீட்டு சின்னத்துக்கு வாக்களித்து தமிழ்த் தேசியத்தைப் பலப்படுத்தல்.

போன்ற தீமானங்கள் எடுக்கப்பட்டன.

## தேர்தல் களம் - 2004

2004

# எங்கள் மண்ணில் சுதந்திரமாக வாழ வீட்டுச் சின்னத்துக்கு வாக்களியுங்கள்

## மாவை சேனாதிராசா தெரிவிப்பு



ஜனாதிபதியின்அதிகார ஆசையால் இன்று இந்த பிரசாரத்திற்கு வந்துள்ளோம். தென்னிலங்கையிலே என்ன நடக்கிறது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருககிறோம் அடுத்த 2 ஆண்டுகளுக்குள் சந்திரிகா அவருடைய அரசியல் எதிர்காலத்தை தீர்மானிப்பவராக இருக்கின்றார். ஏனெனறால் அடுத்த 2 ஆண்டுகளுக்குப் பின் ஜனாதிபதி ஆட்சி ஒழிந்து போகும் நேரத்தில் பண்டாரநாயக்கா குடும்பத்தின் அரசின் எதிர்காலம் என்ன என்பதைப் பற்றி சந்திரிகாவிற்கு ஒரு கேள்விக்குறி எழுந்துள்ளது.

மீசாலையில் நடந்த கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போது மாவை சேனாதிராசா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றியதாவது -

இதுதான் இந்தப் பிரச்சினை. உலகில் உள்ளவர்கள் சர்வதேச சமூகம், சிங்கள மக்களில் நியாய பூர்வ எண்ணம் கொண்டவர்கள், தமிழ் மக்கள், மலையக மக்கள் ஏன் முஸ்லிம்களும்கூட இந்த நாட்டிலே இனப்பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால், தமிழ் மக்களின் ஆட்சி உரிமைக்கு அங்கீகாரம் கொடுக்கப்படாவிட்டால் இந்தப் போரே நிறுத்தப்படமுடியாது. அழிந்தது போதாதா என்று ஏங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில், இந்த ஏக்கம் எப்போது வந்தது.

யாழ குடாநாட்டில் மட்டும் கிட்டத்தட்ட 30 வீதமான நிலப்பரப்பானது நாங்கள்தான் இதன் ஆட்சிக்காரர்கள் என்று சொல்லக்கூடிய, பேரினவாத அரசின் இராணுவம், இந்த மண்ணை ஆக்கிரமித்து நிற்கின்றார்கள்.

உயர் பாதுகாப்பு வலயம் எனத் தெரிவித்து எங்களது மக்களை இந்த மண்ணில் இருந்து துரத்திவிட்டு 7000 வீடுகள் வரை அழிவடைந்தும் எஞ்சிய வீடுகளில் தாங்களே குடியிருந்துகொண்டு எங்கள் மக்களை மீளக்குடியமர அனுமதிக்காமல் வெளியே அனுப்பிவிட்டு பலாலி விமானதளத்தை பாதுகாக்க அப்பிரதேசம் வேண்டும் என்கிறார்கள்.

ஆனால் 100 க்கு 100 வீதம் சிங்களவர்கள் இருக்கின்ற கட்டுநாயக்கா, சர்வதேச உயர் பாதுகாப்பு வலயத்துள் இருக்கின்ற பிரதேசம் 2001 ஆம் ஆண்டு ஜுலை 24 ஆம் திகதி - எனக்குத் தெரியாது, யார் அடித்தார்கள் என்று, 3 மணித்தியாலத்தினுள் கிட்டத்தட்ட விமான தளம் நாசமாக்கப்பட்டது.

இந்த நாட்டின் ஒரு ஆண்டுக்கான பாதுகாப்புச் செலவு 8500 கோடி ரூபா. ஆனால், 100 வீத சிங்களவர்களின் இடத்தில் விமானத் தளம் 10500 கோடி ரூபாவிற்கு மேல் இழப்புக்களையும், பல லட்சம ஊழியர்களின் வேலை இழப்பு, நிரந்தர வருமான இழப்பு போன்ற நிகழ்வுகளே இடம்பெற்றது. நாங்கள் தெரிந்துகொள்ள முன் சர்வதேசம் சொல்லுகின்றது அது விடுதலைப் புலிகள் செய்திருப்பார்களாம். சிங்கள ஆய்வாளர்கள், புலனாய்வுப் பிரிவினர் பிறகுதான் இது தொடர்பாகச்சொல்லத் தொடங்கினார்கள்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

*தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காக அனைவரும் உழைக்கவேண்டும் என்று நேற்றையதினம் வெளிவந்த சுரேஷ் பிரேமச்சந்திரனது நேர்காணலில் 5 ஆவது கொலத்தின் 9 ஆவது பந்தியில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் யாழ். மாவட்டத்தில் நான் ஒருவன் மாத்திரமே போட்டியிடுகிறேன என்று தவறுதலாக வந்துள்ளது. அது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சார்பில் என்று வரவேண்டும்.*

*இதனை வாசகர்கள் திருத்தி வாசிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். தவறுக்கு வருந்துகின்றோம்.*

# பாக்தாத்தில் உல்லாச விடுதியில் குண்டுவெடிப்பு 27 பொதுமக்கள் பலி; 45 பேர் படுகாயமடைந்தனர்!

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் நேற்று முன்தினம் இரவு உல்லாச விடுதியொன்றில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 27 பேர் கொல்லப்பட்டனர். இக்குண்டுத் தாக்குதல்களுக்கு 450 கிலோகிராம் வெடிபொருள் உபயோகிக்கப்பட்டதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது. இந்தத் தாக்குதலில் 45 பேர்வரை படுகாயமடைந்திருந்தனர். பிரித்தானியாவைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டும் மற்று மொருவர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள், விடுதிக்கு அருகில் வசித்துவந்த ஈராக்கியர்களாவர். இம்மக்கள் அமெரிக்கப் படையினர் மீதே ஆத்திரம் கொண்டுள்ளதாதகவும், இத் தாக்குதலுக்கு அமெரிக்க விமானத்திலிருந்து ஏவப்பட்ட ஏவுகணையே காரணமெனவும் தெரிவித்துள்ளனர்.



ஆனால், அமெரிக்கக் கூட்டுப் படையினர் அப்பிரதேசத்தில் பணியில் ஈடுபடவில்லை என்றும், பொதுமக்கள் மீதே தீவிரவாதிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதென அமெரிக்கப் படையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இக் குண்டுவெடிப்பில் 20 அடி அகலமும் 10 அடி ஆழமும் கொண்ட பள்ளம் ஒன்று விடுதிக்கருகில் ஏற்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேலும் இரு தாக்குதல்கள் நிகழ்ந்துள்ளன. பாக்தாத்தில் அமெரிக்க தளம் ஒன்றின் மீது மேற்கொண்ட தாக்குதலில் அமெரிக்கப்படையினர் மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.

பெப்ரவரி மாதம் ஈராக்கில் போர் ஆரம்பித்ததில் இருந்து 400 பொதுமக்கள் இதுவரை கொல்லப்பட்டுள்ளனர்.

## உதைபந்தாட்ட ரசிகர்கள் சென்ற படகு நீரில்மூழ்கி 15 பேர்வரையில் பலி!

### மாலைதீவில் சம்பவம்

நூற்றுக்கும் மேற்பட்ட உதைபந்தாட்ட ரசிகர்கள் பிரயாணம் செய்த படகு நீரில் மூழ்கி 15 பேர்வரை உயிரிழந்துள்ளனர். இந்த விபத்து நேற்றுமுன்தினம் மாலைதீவின் தினடோ என்ற சிறுதீவில் நிகழ்ந்துள்ளது. உயிரிழந்தவர்களின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும், மீட்கப்பட்ட உடல்களில் சிறுவர்களும் அடங்கியுள்ளதாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விபத்தில் மூழ்கியவர்களில் 100 பேர்வரை மீட்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

மாலைதீவில் 1192 க்கு மேற்பட்ட பவளப் பாறைகள் கொண்ட சிறு தீவுகள் காணப்படுகின்றன. இதனால், உல்லாசப் பிரயாணிகள் உலகின் பல பாகங்களில் இருந்தும் இந்தத் தீவுகளுக்கு பிரயாணம் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஸ்பெயின் குண்டுவெடிப்பு

# சந்தேக நபர்கள் ஐவர் மீது விசாரணைகள் நடத்தப்படும்!



ஸ்பெயின் மட்றிட் குண்டு வெடிப்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஐவர் மீதான குற்றங்கள் விசாரிக்கப்படவுள்ளன.

மூன்று மொரொக்கோ நாட்டவரும் இரண்டு இந்தியர்களும் தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதனிடையே ஸ்பெயின் உள்நாட்டமைச்சர் பதவியிலிருந்து விலகுவதற்குமுன் கருத்துத் தெரிவிக்கும்போது, விமான நிலையம், போக்குவரத்து நிலையங்கள் மற்றும் முக்கிய பிரதேசங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இவ்விசாரணையில் முன்னேற்றம் ஏற்பட்டு வருவதாகவும் உள்நாட்டமைச்சர் அசெபெஷ் தெரிவித்துள்ளார். இதேவேளை சர்வதேச நாடுகளில் தொடர்புகளையம் ஆராய்ந்துவருவதாக அமைச்சர் அசெபெஷ் தெரிவித்தார்.

பொலிஸார் மேலும் 20 மொறோக்கோ நாட்டைச் சேர்ந்தவர்களை குண்டுத் தாக்குதல் தொடர்பாக தேடிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வன்செயல்களைக் கட்டுப்படுத்த

# கொசோவோவிற்கு – நேட்டோ அமைதிப்படையை அனுப்பியது!

சேபியர்களுக்கும், அல்பேனியர்களுககுமிடையே ஏற்பட்டுள்ள வன்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காக நேட்டோ அமைதிப்படை ஒன்றை கொசோவோவிற்கு அனுப்பியுள்ளது. நேட்டோவின் கட்டுப்பாட்டில் அமைந்துள்ள இப்பிரதேசத்தில் 22 பேர்வரை கொல்லப்பட்டதாகவும், 500 பேர்வரை காயப்பட்டுள்ளதாகவும், புறுசெலில் அமைந்துள்ள நேட்டோ தலைமைச் செயலகம் தெரிவித்துள்ளது. இதுவரை நேட்டோவின 150 அமெரிக்கத் துருப்பினர் சென்றுள்ளதாகவும் - மேலும் துருப்புக்கள் அனுபப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதனிடையே நேட்டோ படையினர் 1999 ஆண்டு அல்பேனியர்கள், சேபியர்கள் மத்தியில் நடைபெற்ற போரை கட்டுப்படுத்துவதற்காக அனுப்பப்பட்டிருந்தனர். தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட வன்முறைகள் தொடர்பாக தெரிவிக்கப்பட்டதாவது -

கொசோவோவின் வட பகுதியில் அமைந்துள்ள மிற்றோவிக்காவில் மூன்று அல்பேனிய சிறுவர்களை சேபியர்கள் துரத்திக்கொண்டுசெனற வேளையில் அந்தச் சிறுவர்கள் சேபியர்களிடமிருந்து தப்பித்துக்கொள்வதற்காக ஆற்றில் மூழ்கி மரணமானார்கள். சிறுவர்களின் மரணத்தினால், நூற்றுக் கணக்கான அல்பேனியர்கள்- சேபியர்களுக்கெதிராக தாக்குதல்கள் மேற்கொண்டதாக ஐக்கிய நாடுகளின் நிர்வாகத்தில் அமைந்துள்ள பொலிஸ் படையின் பெண் அதிகாரியான உன்மிக் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பெல்கிரேட்டில் சேபியர்கள் தமது இன மக்கள் கொசோவோவில் தாக்கப்பட்டமைக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் மேற்கொண்டிருந்தனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சேபியர்கள் பள்ளிவாசல் ஒன்றையும் தீக்கிரையாக்கியுள்ளனர்.

# அமெரிக்க இராஜாங்க செயலர் பாகிஸ்தானுக்கு நேற்று விஜயம்



அமெரிக்க இராஜாங்க செயலர் 'கொலின் பவல்' நேற்று பாகிஸ்தான் சென்றுள்ளார். இவ்வாறு சென்ற இவர் அந்நாட்டு வெளிநாட்டமைச்சர் ம.்.மூட் கசூரியுடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டிருந்தார். இவ்வேளை பாகிஸ்தான் 'நேட்டோ' வில் அங்கம் வகிக்காத அமெரிக்காவின் நண்பன் தெரிவித்தார். இக்கருத்தின் மூலம் இரு நாடுகளும் பாதுகாப்பு உடன்பாடுகளை மேலும் பலப்படுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பாகிஸ்தான் படையினர் ஆப்கானிஸ்தான் எல்லைப்பிரதேசத்தில் பழங்குடி பாகிஸ்தானியர்கள் வாழும் பிரதேசங்களில் படை நடவடிக்கையினை தற்போது மேற்கொண்டுவருகின்றனர்.

இவர்களின் இந்த நடவடிக்கையில் 40 பேர்வரை கொல்லப்பட்டுள்ளனர். இப்பகுதிகளில் வாழும் பொதுமக்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பி.பி.சி செய்தியாளர் கருத்துத் தெரிவிக்கும்போது, போராளிக் குழுக்கள் பலமான எதிர்ப்பினை வெளிப்படுத்தி வருவதன் மூலம் அல்கொய்டா தலைவர் பின்லேடன் அப்பிரதேசத்தில் ஒழிந்திருப்பதாக கருதப்படலாம் என தெரிவித்துள்ளார்.

இத்தாக்குதலை அமெரிக்கா வரவேற்றுள்ளது. பயங்கரவாதத்திற்கெதிராக பாகிஸ்தான் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு கொலின பவல் அமெரிக்க அதிபர் புஷ் சார்பாக பாகிஸ்தான் படையினரின் அர்ப்பணிப்பிற்கு நன்றிக்கடன் தெரிவித்தார்.

## தென்கொரிய ஜனாதிபதியை

# பதவியிலிருந்து வெளியேற்றுவது தொடர்பாக அரசியல் அமைப்பு நீதிமன்றம் ஆராயவுள்ளது!



தென்கொரியாவின் அரசியல் அமைப்பு நீதிமன்றம் ஜனாதிபதி ரோ மூ கையுமை பதவியிலிருந்து முற்றாக வெளியேற்றுவது தொடர்பாக ஆராயவுள்ளது. சென்றவாரம் ஜனாதிபதிக்கெதிராக எதிர்க்கட்சிகளின் நம்பிக்கையில்லா பிரேரணை பெரும்பான்மை வாக்குகள் மூலம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

அரசியலமைப்பு நீதி மன்றம் 180 நாட்கள் வரை தீர்மானமொன்றை மேற்கொள்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இதனால் அக் கால எல்லைவரை ஜனாதிபதி பதவியிலிருந்து நீக்கப்படவேண்டும்.

மேலும் இந் நீதிமன்றத்தில் 9 நீதிபதிகள் கடமையாற்றுவர் எனவும் நீதிபதிகள் ஆதரவு தெரிவித்தால் மாத்திரமே ஜனாதிபதி 'ரோ' பதவியிலிருந்து நீக்கப்படுவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி அரசியல் சட்ட நதிமன்றத்தினால் பதவியிலிருந்து நீக்கப்பட்டாலும், 60 நாட்களில் மீண்டும் ஜனாதிபதியாக போட்டியும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இதே நேரத்தில் வடகொரியா ஜனாதிபதி ரோவின் பதவி விலக்கல் தொடர்பாக கருத்துத் தெரிவிக்க கூடாதென தென்கொரியாவை எச்சரித்துள்ளது.

மேலும் பல ஆயிரக்கணக்கான மக்கள் ஜனாதிபதி ரோவின் பதவி விலகல் தொடர்பாக ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டிருந்தனர்.

# பொடாவில் கைதான ஹமித் பிணையில் செல்ல அனுமதி

பொடா சட்டத்தின் கீழ் கைதாகி ஒரு வருடமாக சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழர் தேசிய இயக்கத்தைச் சேர்ந்த ஷாகுல் ஹமீத்தை பிணையில் செல்ல சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை ஆனந்த் தியேட்டர் வளாகத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக கூட்டம் நடத்தியதாகக் கூறி கடந்த ஆண்டு தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ நெடுமாறன் உள்ளிட்டவர்கள் பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பின்னர் ஷாகுல் ஹமீத்திடம் கைதுசெய்யப்பட்டார்.

தங்களை பிணையில் விடக்கோரி நெடுமாறன் உள்ளிட்டவர்கள் பிணை மனுத் தாக்கல் செய்தபோது மற்றவர்களுக்கு பிணை கிடைத்தது. ஆனால், சாகுல் கைதாகி ஒரு வருடம் நிறைவடையவில்லை என்பதைக் காரணம் காட்டி அவருக்கு மட்டும் பிணை மறுக்கப்பட்டது.

இந்நிலையில் சிறையில் ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்தார் ஷாகுல் ஹமித் இதைத் தொடர்ந்து தன்னை பிணையில் விடுவிக்கக் கோரி ஷாகுல் ஹமித் உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார்.

அவரது மனுவை விசாரித்த நீதிபதிகள் சிர்புர்கர், இப்ராகிம், கலிபுல்லா ஆகியோர் சாகுல் ஹமித்தை நிபுந்தனையுடனான பிணையில் விடுவிக்க உத்தரவிட்டனர்.

# கிரிக்கெட் வீரர் சித்து அமிர்தசரசில் போட்டி



பிரபல முன்னாள் கிரிக்கெட் வீரரான நவ்ஜோத் சிங் சித்து அண்மையில் பாரதீய ஜனதா கட்சியில் சேர்ந்தார். தற்போது கிரிக்கெட் வர்ணணையாளராக பணியாற்றிவரும் அவர் இந்திய அணியின் பாகிஸ்தான் சுற்றுப்பயணம் முடிந்தபின் நாடு முழுவதும் தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவேன் என்று கூறியிருக்கின்றார்.

மேலும் கட்சி மேலிடம் கேட்டுக்கொண்டால் தேர்தலில் போட்டியிடுவேன் என்று கூறியிருந்தார்.

அமர்தசரஸ் தொகுதி காங்கிரஸ் கட்சியின் கோட்டையாக இருந்து வருகிறது. கடந்த தேர்தல்களில இத்தொகுதியை இழந்துள்ள பாரதீய ஜனதா இம்முறை எப்படியாவது காங்கிரஸிடமிருந்து கைப்பற்றவேண்டும் என்ற முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

இதற்கான வேட்பாளரை தேர்வு செய்யும் பணியில் பாரதீய ஜனதா கட்சி மேலிடம் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. இதில் கிரிக்கெட் வீரர் சித்துவை நிறுத்தலாம் என்று முடிவு செய்திருப்பதாக தெரிகிறது. சித்துவின் குடும்பம் அரசியல் பாரம்பரியம் மிக்கது எனபதாலும், அவாருக்கு இருக்கும் தனிபட்ட செல்வாக்கு மற்றும் சித்துவின் இனத்தினர் அதிக அளவில் அமிர்தசரஸில் உள்ளதா_ம் அவரை நிறுத்தினால் வெற்றிபெற்றுவிடலாம் என்று பாரதீய ஜனாதா கருகிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# 10 இலட்சம் வரையான வெடிபொருட்கள் குடாநாட்டில் புதைக்கப்பட்டிருக்கின்றன!

## யு.என்.டி.பி ஆலோசகர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இன்னும் பத்து லட்சத்திற்கும் அதிகமான வெடி பொருட்கள் அகற்றப்பட வேண்டியிருப்பதாக யு.என்.டி.பி.யின் ஆலோசகரான ரிம்.ஹோனார் தெரிவித்தார்.

யாழ்.செயலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையில் கடந்த 20 வருடங்களாக நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தால், அதிகளவான வெடி பொருட்கள் புதைக்கப்பட்ட மாவட்டமாக யாழ்.மாவட்டம் விளங்குகின்றது.

இங்கு வெடிபொருட்களை அகற்றும் பணிகளை யாழ். செயலகத்தில் இயங்கும் மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம் ஊடாக ஹலோ ரஸ்ட் வெடியகற்றும் பிரிவு டெனிஸ் வெடிபொருள் அகற்றும் பிரிவு இராணுவ வெடிபொருள் அகற்றும் பிரிவு என்பன மேற்கொண்டு வருகின்றன.

சுமார் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட வெடிபொருட்கள் இங்கு அகற்றப்பட்டுள்ள போதிலும், இராணுவம், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆகியோரின் தகவல்களின்படி சுமார் பத்து லட்சம் வரையிலான வெடிபொருட்கள் யாழ்ப்பாணத்தில் பல்வேறு பகுதிகளிலும் இன்னும் புதைக்கப்பட்ட நிலையில் இருக்கலாம் எனக் கருதுகின்றோம்.

இதில் 75 முதல் 80 வீதமானவை இராணுவத்தினராலும், 25 முதல் 30 வீதமானவை தமிழீழ விடுதலைப் புலிகளாலும் புதைக்கப்பட்டவையாக இருக்கின்றன.

இராணுவத்தினர் புதைத்த மிதிவெடிகள் தொடர்பான வரை படங்கள் எமக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகள் தாம் புதைத்த வெடிபொருட்கள் தொடர்பான எந்தவொரு தகவலையும் தராமல் இருப்பது எமக்கு சிரமத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.

யாழ்ப்பாணத்தின் மொத்த நிலப் பரப்பில் 25 சதவீதமான நிலப்பரப்பு உயர் பாதுகாப்பு வலயங்களாகவும், 35 சதவீதமான நிலப்பரப்பு வெடி பொருட்கள் உள்ளவையாகவும் இருக்கின்றமை பாவனைக்கு இருப்பிட வசதிகளைக் குறைத்து பல சிக்கல்களை உருவாக்கியிருக்கின்றமையை நாம் உணர்ந்துள்ளோம்.

இதனடிப்படையிலேயே, வெடி பொருட்கள் அகற்றும் பணியை விரிவுபடுத்தியுள்ளோம்.

எனினும், அரச படைகளும், தமிழீழ விடுதலைப் புலிகளும் தமது பாதுகாப்பிற்கு இந்த வெடிபொருட்களை பாவிப்பதாக தெரிவித்து வருவதாக கூறுகின்றனர்.

தாம் இத்தகைய வெடிபொருட்களை இனிமேல் பாவிப்பதில்லை என இவர்கள் உறுதிவழங்க மறுப்பதாலும், ஒட்டாவா ஒப்பந்தத்தில் கைச்சாத்திட மறுப்பதாலும் பல உலக நாடுகள் வெடிபொருள் அகற்றும் பணிக்கு உதவுவதற்கு முன்வரத் தயங்குகின்றன.

மக்களின் பிரச்சினை சம்பந்தமாக அக்கறை கொண்டு இந்த வெடிபொருள் அராஜகத்திலிருந்து அவர்களைப் பாதுகாக்க அனைவரும் முன்வரவேண்டும் என அவர் தெரிவித்தார். (பு)

# மீண்டும் துளிர்க்கும் வசந்தம் நூல் அறிமுக விழா!

## நாவலர் மண்டபத்தில் நடைபெற்றது

போராளிக் கலைஞர் அம்புலியின் மீண்டும் துளிர்க்கும் வசந்தம் என்ற நூல் அறிமுக விழா நேற்று நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஏற்றிவைத்தார்.

பொதுச் சுடரினை இரண்டாம் லெப். கலைவாணன், அம்புலி ஆகியோரின் தாயார் ஏற்றிவைத்தார்.

நூலின் அறிமுக உரையினை விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை ஆற்றினார்.

அதனைத் தொடர்ந்து கவிஞர் கா.வே.பஞ்சாட்சரம் நூலினை வெளியிட்டுவைக்க யாழ். மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர்களில் ஒருவரான பத்மினி சிதம்பரநாதன் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

எழுத்தாளர் தாமரைச் செல்வி கலாநிதி சிவலிங்கராஜா ஆகியோர் மதிப்பீட்டு உரைகளினை ஆற்றினர்.

# அரசாங்கத்தின் சொத்துக்களை இருகட்சிகளும் துஷ்பிரயோகம்!

## பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்கும் அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த 14 ஆம் திகதி நாட்டு மக்களுக்கு ஊடகங்கள் மூலம் உரையாற்றியமையால் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அந்த திட்டம் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஜனாதிபதியின் உரையாக சந்திரிகாவின் உரை அமைந்தாலும் அதன் குறிக்கோளானது அவரால் வழிநடத்தப்படும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு பிரசாரமாக அமைந்திருந்தது.

இதன்மூலம் ஜனாதிபதி தேர்தல் ஆணையாளரின் வழிநடத்தலையும் மீறியுள்ளார்.

அத்துடன் ஜனாதிபதி மாளிகை கட்சி செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படுவதும் அரசாங்க சொத்தை துஷ்பிரயோகம் செய்யும் செயலாகும்.

புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன தனக்கு வாக்குகளை அதிகரித்துக் கொள்வதற்காக அரசாங்கத்தின் அவசரகால நிவாரணங்களை விநியோகித்து வருகின்றார்.

விவசாய அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க இரண்டு அரசாங்க வாகனங்களை தனது ஹங்குராங்கொத்த வீட்டில் மறைத்துவைத்திருப்பதாக கூறப்படுகின்றது.

குருநாகலிலும் தேர்தல் பிரசாரத்திற்காக ஒருவாகனம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அத்துடன் மத்திய மாகாண சுகாதார அமைச்சின் வாகனமும் இவரது தேர்தல் பிரசாரத்திற்கு பயன்படுத்தப்படுகிறது.

போக்குவரத்து அமைச்சின் இரண்டு வாகனங்களும், வீடமைப்பு அமைச்சின் ஒருவாகனமும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களால் தேர்தல் பிரசாரத்திற்கு பயன்படுத்தப்படுகிறது.

அத்துடன், வடமேல் பிராந்திய அபிவிருத்தி அமைச்சு தபால் தொலைத்தொடர்பு அமைச்சு மற்றும் அரச அச்சக கூட்டுத்தாபனம் என்பவற்றின் வாகனங்கள் அமைச்சர் டி.எம்.ஜெயரத்னவினால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரத்திற்காக பயன்படுத்தப்படுகிறது.

இவ்வாறு அரசியல்வாதிகள் தம்மிடமுள்ள அரசாங்க சொத்துக்களை கையளிக்காது அவற்றை துஷ்பிரயோகம் செய்வதாக பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டம் குறிப்பிட்டுள்ளது. (01)

# தேர்தல் கண்காணிப்பாளரை ஜப்பானும் அனுப்பவுள்ளது!

(கொழும்பு)

அடுத்த மாதம் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றப் பொதுத்தேர்தலை கண்காணிப்பதற்கு ஜப்பானிய கண்காணிப்புக் குழுவொன்று வருகிறது.

இலங்கையில் நடைபெறும் தேர்தல் கண்காணிக்கும் பணியில் ஜப்பான் இம்முறையே முதல்தடவையாக ஈடுபடவுள்ளது.

ஜப்பானிலிருந்து 12 கண்காணிப்பாளர்கள் தேர்தலைக் கண்காணிப்பதற்கு இலங்கை வரவுள்ளதாகத் தெரியவருகிறது. இவர்கள் தேர்தல் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணிக்கவுள்ளனர்.

இவர்கள் இந்த மாத இறுதியில் இலங்கைக்கு வரவுள்ளார்கள் என்றும், தேர்தல் கண்காணிப்புக்காக பவ்ரல் அமைப்புக்கு 30 ஆயிரத்து 680 அமெரிக்க டொல்கள் ஜப்பான் வழங்கவிருப்பதாகவும் தெரியவருகிறது.

## சாதாரண....

20 ஆயிரத்து 600 பேரும், 3 லட்சத்து 80 ஆயிரம் பாடசலைப் பரீட்சார்த்திகளும் தோற்றியிருந்தனர்.

இந்த பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன எனவும் அடுத்த வாரம் முடிவுகள் வெளியிடப்படும் என்றும் பரீட்சைத் திணைக்கள அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## அன்னை....

அன்னை பூபதியின் நினைவு தினம் அனைத்து மாவீரர் துயிலும் இல்லங்களிலும் கிராமங்கள் ரீதியாகவும் நினைவு மண்டபங்கள் மூலமும் கடைப்பிடிக்கப்படவுள்ளன.

இன்று உண்ணாவிரத நிகழ்வு இடம்பெறுவதுடன் நினைவுக் கூட்டமும் இடம்பெறவுள்ளது. இதே வேளை, புலம்பெயர்ந்த நாடுகளிலும் அன்னை பூபதியின் நினைவு நாட்கள் கடைப்பிடிக்கப்படவுள்ளன.

## புதிதாக.....

தலைப் புலிகளின் பிரதான தலைமைக்கும் இடையே பல்வேறு தொடர்புகள் இருந்துவருகின்றன. ஆனால், அதைப்பற்றி இப்போது கூறமுடியாது.

அடுத்த மாதத் தேர்தலில் எமது கட்சி வெற்றியீட்டினால் அதன் பின்னர், அமையும் அரசு அமைதிப் பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து நடத்தும்.

தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைவிட தொழில் திறன் முறையுடன் அந்தப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமக்கு நெருக்கமான சிலருடன் இரகசியமாக ஒரு மூலையில் அமர்ந்து கொண்டு ஆலோசனையினைச் செய்து, இந்தப் பேச்சுவார்த்தைகளை நடத்தினார்.

பாதுகாப்பு அமைச்சை பொறுப்பேற்றபின்பு அந்த அமைச்சுக்குச் செய்யவேண்டிய நடவடிக்கைகளுக்கு அவசியமான நிதியை அமைச்சர் தராமல் முடக்கிவிட்டார்.

எனவே, அவருடைய பதவியைப் பறிப்பதற்கான நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆனால், பிரதமர் அவ்விதம் செய்யவிரும்பவில்லை எனவும் ஜனாதிபதி சந்திரிகா மேலும் குறிப்பிட்டார்.

## வாக்காளர்களுக்காக வன்னி...

வண்ணாமோட்டை பாடசாலையிலும், மடு வீதிச் சந்தியிலே கிறிஸ்தவ தேவாலயத்திலும், ஓமந்தை வீதியிலே ஓமந்தை மத்திய மகாவித்தியாலயத்திலும் கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படுவதாக இறுதி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் தமது இருப்பிடத்தில் இருந்து சோதனைச்சாவடிக்கு வருவதற்குரிய ஏற்பாடுகள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும். சோதனைச் சாவடியில் இருந்து வாக்களிப்பு நிலையத்திற்கு குறுந்தூர பஸ்சேவை மேற்கொள்ளப்படும்.

வாக்காளர்கள் வாக்களிக்க வரும்போது தேசிய அடையாள அட்டை அல்லது கிராம அலுவலரால் வழங்கப்பட்ட அடையாள அட்டை அல்லது அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்ட அடையாள அட்டையுடனும், வாக்காளர் அட்டையுடனும் வரவேண்டும்.

வாக்களிக்க வரும்போது, இவை தவிர்ந்த பொருட்களைக் கொண்டு வருவதை முற்றாக தவிர்க்க வேண்டும். வாக்களிப்பு நிலையங்கள் யாவும் சோதனைச் சாவடிக்கு தென்புறமாக கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் - சோதனைச்சாவடிக்கு அண்மையாக அமைக்கப்படும் எனவும் தெரிவத்தாட்சி அலுவலர் கணேஸ் தெரிவித்தார்.

## ஓட்டமாவடி சம்பவம்...

சேவை மட்டுமே இடம்பெற்றன.

இந்தப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையைத் தணிப்பதற்காக மேலதிக பொலிஸாரும், இராணுவததினரும் கூட்டாகப் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்றது போன்று வன்முறைச் சம்பவங்கள் மேலும் தொடராத வண்ணம் உரிய பாதுகாப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

அரசியற் கட்சியொன்றின் வேட்பாளர் ஒருவரின் வருகையை அடுத்து, நேற்று முன்தினம் நடைபெற்ற வீதிமறியற் போராட்டத்தை தடுக்க முற்பட்டவேளையில் படையினருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் ஏற்பட்ட கலகத்தில் இரண்டு இராணுவத்தினரும், 15 பொதுமக்களும் காயமடைந்தனர்.

இரண்டு இராணுவ வாகனங்கள் கல்வீச்சுக்கு இலக்காகி தேசமடைந்தன.

காயமடைந்தவர்களில் மூவர் ஆபத்தான நிலையில் பொலநறுவை வைத்தியாசாலையிலும், 16 பேர் மாஞ்சோலை வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 13 அமைச்...

நுட்பத்துறை அமைச்சு என்பனவே ஜனாதிபதியால் ரத்துச்செய்யப்பட்ட அமைச்சுக்களாகும்.

இதேவேளை, நாடாளுமன்ற விவகார அமைச்சு உள்துறை அமைச்சுடனும், நகர அபிவிருத்தி அமைச்சு மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சுடனும் இணைக்கப்பட்டுள்ளன.

13 அமைச்சுக்கள் ஜனாதிபதியால் ரத்துச்செய்யப்பட்ட அதே நேரம் மேலும் 14 அமைச்சுக்கள் தொடர்ந்தும் ஜனாதிபதியின் பொறுப்பிலேயே உள்ளன. (01)

## லண்டனில்...

ஆராயப்பட்டதாகவும் இந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் எரிக் சொல்ஹெய்ம் கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது.

# மரணஅறிவித்தல்

## கந்தையா தனபாலசிங்கம்

(மின்மாணி வாசிப்பாளர், இலங்கை மின்சாரசபை, யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம், கந்தர்மடம், இல: 14/1, புகையிரத வீதியைச் சேர்ந்த கந்தையா தனபாலசிங்கம் அவர்கள் நேற்று (16.03.2004) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - இலட்சுமியின் அன்பு மகனும், இந்திராவின் அன்புக் கணவரும், ஜெயரஞ்சினி (பிரான்ஸ்), சுஜீவன், சுஜேந்திரன் (சமுர்த்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்), சுதாகரன் (கொழும்பு), ஜெயசீலி (இலண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், லோகதாஸ் (பிரான்ஸ்), றஜனி, செல்வமலர், ஜெனோதாஸ் (இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கிஷோர், சஜிதா, பவித்திரன் ஆகியோரின் பாசமிகு பேரனும், குணபாலசிங்கம், செல்வராசா, பத்மநாதன், காலஞ்சென்ற தவமணி, நேசமலர், தேவிகா, இராசமலர், மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.03.2004) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வண்ணை. கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

இல: 14/1, புகையிரத வீதி,
கந்தர்மடம்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.03.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.